விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 10 புதன்கிழமை (26.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 281

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரத போராட்டம்

### 13ஆவது நாளாக தொடர்கின்றது

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரத போராட்டம் நேற்று 13-வது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்றது.

இந் நிலையில் அரசியல் கைதிகள் சிறைச்சாலை உணவை புறக்கணிக்கும், நிலையில் அவர்களது உடல்நிலை மற்றும் ஆரோக்கியம் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் இருவருக்கு தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு 23☛

## மோட்டார் சைக்கிள் மோதி விபத்து; முதியவர் உயிரிழப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

உரும்பிராய் மடத்தடிப் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் உரும்பிராய் மடத்தடி பகுதியைச் சேர்ந்த மகாலிங்கம் (வயது69) என்பவரே 02☛

## திலீபனின் நினைவு நிகழ்வை யாழ். மாநகரசபையே நடத்தும்

### மாநகர முதல்வர் ஆனல்ட் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

திலீபனின் நினைவு நிகழ்வுகள் ஏற்கெனவே திட்டமிட்டபடி யாழ். மாநகரசபையின் ஏற்பாட்டிலேயே இடம்பெறும் என யாழ் மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

தியாகி திலீபனின் நினைவுநாள் நிகழ்வுகளை யாழ் மாநகரசபையே பொறுப்பேற்று நடத்தும் என்று அறிவித்திருந்தோம். இத்தீர்மானத்திற்கு தடையுத்தரவு கோரி யாழ்ப்பாணம் நீதிமன்றிலே யாழ்ப்பாண 24☛

## குழந்தை கடத்தல் வழக்கு துரித கதியில் முன்னெடுப்பு


### சி.ஐ.டி நீதிமன்றுக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தை கடத்தப்பட்ட குற்றச்சாட்டு வழக்கின் விசாரணைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் உட்பட மூவரிடம் வாக்குமூலம் பெறப் 02☛

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இன்று



## தடை விதிக்கக் கோரிய பொலிஸாரின் மனு யாழ் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்) தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் இன்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் தூபியில் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு பொலிஸார் விண்ணப்பித்த கோரிக்கை மனுவை யாழ் நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (23-ம் பக்.)

தமிழரசுக்கட்சிக்கு எதிராக

## தொடரப்பட்ட வழக்கு வாபஸ்

(யாழ்ப்பாணம்)

தமிழரசு கட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், வழக்கை மீளப் பெற விரும்புவதாக மனுதாரரான ஜி.பிரகாஸ் தெரிவித்ததை அடுத்து வழக்கு நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜி. பிரகாஸை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பு 23☛

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டும்

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



(கொழும்பு)

தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் மற்றும் இதுவரை குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாத அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ 24☛

## ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான அமர்வு ஆரம்பம்

### ஜனாதிபதி மைத்திரி இன்று அதிகாலை விசேட உரை

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் 73-வது பொதுச்சபை கூட்டத் தொடரின் பிரதான அமர்வு நேற்று பிற்பகல் நியூயோர்க் நகரிலுள்ள ஐ.நா தலைமையகத்தில் ஆரம்பமானது.

முழு உலகும் எதிர்பார்த்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இவ்வருட பொதுச்சபை கூட்டத்தொடர் ஐக்கிய நாடுகள் சபையை சகல மக்களுக்கும் அணுகச் செய்தல், நீதியும் அமைதியும் பேண்தகு 24☛

## பொன்சேகாவிடம் நான்கு மணிநேரம் தீவிர விசாரணை



(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக் 24☛

## இரட்டை ஆண் குழந்தைகளை பிரசவித்த தாயார் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்த தாயார் ஒருவர் உயிரிழந்துள்ளார். சுகப்பிரசவம் மூலம் இரட்டை ஆண் குழந்தைகளை பெற்றுவிட்டு குறித்த தாய் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் சடுதியாக மூர்ச்சையாகியுள்ளார்.

உடனடியாக உயிர் காக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தீவகம் வேலணையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயாரான விஜயகுமார் நிரோஜனி (வயது-32) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கர்ப்பிணித் தாய் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் பிற்பகல் 3 மணி 23☛

## கொலைகள், கடத்தல்களுக்கு கோத்தபாயவே காரணம்!

### பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட புறநகர்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே காரணம் என அமைச்சர் பீல்ட் மார்சல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், சரத் பொன்சேகாவிடம் நேற்று நான்கு மணித்தியாலங்களுக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 23☛

# மரண அறிவித்தல்

## திருமதி சிவசாமி செந்தமிழ்ச்செல்வி



வேலணை வடக்கு, சோளாவத்தையை பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசாமி செந்தமிழ்ச்செல்வி 25.09.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-செல்லம்மா தம்பதியினரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-பொன்னம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசாமி (கவிஞர் தில்லைச்சிவன்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம், செவ்வேள், குமரவேல் அவர்களின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சங்கவதியம்மா, பரராசசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், தெய்வச்சிலை, தயாபரன் (ஓய்வுநிலை நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்-விகடன் பிறிண்டர்ஸ்-கொழும்பு), பகீரதன் (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பி/உ ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), பார்த்தசாரதி (ஆசிரியர்-தி/கிண்ணியா முஸ்லிம் மகா வித்தியாலயம்), கிருபாகரன் (அதிபர்-யா/வேலணை மத்திய கல்லூரி), அறிவரசி (லண்டன்), அன்பரசி (ஆசிரியை-யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தி.ஜெகநாதன் (அபிராமி களஞ்சியம், பரமேஸ்வரா சந்தி), ஞானசக்தி, சந்திரவதனி (ஆசிரியை-யா/வைத்தீஸ்வரா கல்லூரி), மதிவதனி (ஓய்வுநிலை ஆசிரியை), ரமணி, ப.ஜெயராசசேகரம் (லண்டன்), Dr.கு.கணேசலிங்கம் (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி தேவதா ரதீஜன் (கட்டார்), தயானி (மாணவி-யாழ்.பல்கலைக்கழகம் விஞ்ஞானபீடம்), திருமதி நர்மதா கலாமோகன் (சட்டக்கல்லூரி-கொழும்பு), Dr.விச்வநேத்திரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), நிவேதா (Scribe on time Pvt.Ltd, HR) வைகுந்தன், பவந்தி, சந்திரகாசன், பிரதீஷா, சிவசங்கர் (CMC Engineering Pvt Ltd), சிவமைந்தன், தேனுகா, கீர்த்தா (லண்டன்), திரிஷா (லண்டன்), வினிசன் (லண்டன்), தேவந்தி, திவ்யா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அப்ஸரா, மீனாட்சியின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்ற கை.செல்வராணி, சு.மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற கண்மணிப்பிள்ளையின் சகலியும், தயாளன், குணாளன் (இத்தாலி), காலஞ்சென்ற மணாளன், சீராளன் (லண்டன்) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.09.2018) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னங்கண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45/1, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:-சி.தயாபரன் (மகன்)
0775586765

(5799)

## குழந்தை கடத்தல்...

பட்டுள்ளது. விரைவில் முழுமையான விசாரணை அறிக்கை மன்றுக்குச் சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று அறிவித்தனர்.

2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாத காலப் பகுதியில் வல்வெட்டித்துறை கரணவாய் பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் பிரசவத்துக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்ததாகவும் மகப்பேற்று நிபுணர்களின் உதவியுடன் தன்னுடைய ஒரு குழந்தை கடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அவரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகள் நீண்ட காலம் இடம்பெற்று தற்போது யாழ்ப்பாணம் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் இடம்பெற்று வருகின்றது.

இந்த வழக்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குப் பாரப்படுத்துமாறும் இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறும் நீதவான் கட்டளை பிறப்பித்திருந்தார்.

இந்த நிலையில் இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இதன் போதே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றுக்கு மேற்கண்டவாறு அறிவித்தனர். (ம)

## மோட்...

உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை உரும்பிராய் மடத்தடிப் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் குறித்த வயோதிபர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-78)


## கார், வான் வாடகைக்கு

கார்கள், வான்கள் நாள், வார அடிப்படையில் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

0770295211

(5795)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(ஜ-3940)


## ஓவியக் கண்காட்சி

எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட ஓவிய கூடத்தில் காலை 9.00 தொடக்கம் மாலை 5.00 வரை "in the north" எனும் தலைப்பில் வட மாகாண அரசியலை மையப்படுத்தியதான ஓவிய கண்காட்சியானது கிழக்கு பல்கலைக்கழக மாணவி பிரபாகரன் பிருந்தாயினியால் நடாத்தப்பட உள்ளது. ஓவியத்துறையில் ஆர்வம் உள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(5790)

# ஈரவிழிகளுடன் ஈராறு மாதங்கள்

## அமரர் சிவகுமாரன் காண்டீபன்



மண்ணில்
24 – 02 – 1986

விண்ணில்
26 – 09 – 2017

மாதங்கள் பன்னிரெண்டு மறைந்தாலும்
மாண்புமிகு காண்டீபா நீ மறையவில்லை
பள்ளிப் பருவத்தில் நீ துள்ளிக்குதித்தாய்
வாலிபத்தில் நண்பர்களை வளைத்துக் குவித்தாய்
கல்வியில் நீ படைத்த சாதனை ஒப்பற்றதாய்
விளையாட்டில் நீ குவித்த வெற்றி அளவற்றதாய்
மாதங்கள் பன்னிரெண்டு மறைந்தாலும்
மாண்புமிகு காண்டீபா நீ மறையவில்லை
பெற்றெடுத்த பெற்றோரிடமும், கைபிடித்த மனைவியிடமும்
உன் பெயர் சொல்ல வந்துதித்த சரன் இடமும் மட்டுமல்ல
ஊரிலும் நல்ல பெயர் என்றென்றும் உனக்கு
உன் குடும்பத்தின் குலவிளக்கல்லவா காண்டீபா நீ
மாதங்கள் பன்னிரெண்டு மறைந்தாலும்
மாண்புமிகு காண்டீபா நீ மறையவில்லை
வங்கியில் உன் பணி ஒரு ஒளிவிளக்கு
வர்த்தகத்தில் நீ ஒரு மணிவிளக்கு
உன் வளர்ச்சியில் பொறாமையுற்ற-காலன்
கபடமாக உன்னை அழைத்துவிட்டானா தம்பி
மாதங்கள் பன்னிரெண்டு மறைந்தாலும்
மாண்புமிகு காண்டீபா நீ மறையவில்லை
என்றும் எங்கள் மனதில் நீ நிறைந்திருப்பாய்
நெல்லண்டை அம்மன் காலடியில் நீ நிலைத்திருப்பாய்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


**அன்புப் பெற்றோர்கள், பிரியமான மனைவி,**
**ஆசை மகன், பாசமுள்ள தங்கை, மைத்துனன்**

# என்றும் மீளா பாதாளத்தில் நாட்டைத் தள்ளிவிட்டு போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டாமென ஐ.நாவில் மண்டியிட்டது இலங்கை அரசு

## கலாநிதி குணதாச குற்றச்சாட்டு

(கொழும்பு)

போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டாம் என ஐக்கிய நாடுகள் சபையில் மண்டியிட்டு நாட்டை மீண்டும் காட்டிக்கொடுக்க இலங்கை அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று தேசிய ஒழுங்கமைப்பு ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர குற்றம் சாட்டியுள்ளார்.



ராஜகிரியவில் அமைந்துள்ள ஒன்றியத்தின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குதல், புதிய அரசியல் அமைப்பினூடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணல் மற்றும் உண்மைகளைக்கண்டறியும்ஆணைக் குழுவை ஸ்தாபித்து அதனூடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற உறுதிமொழிகள் வழங்கி என்றும் மீளா பாதாளத்தில் நாட்டை தள்ளிவிடுவதாகவே அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

மேலும் ஜனாதிபதியின் தற்போதைய நகர்வுகள் நாட்டுக்கு மிகவும் ஆபத்தானதாகும். போர்க் குற்றங்களை ஒப்புக்கொண்டு அதனை விசாரிக்க வேண்டாம் என்று கோருவது போலவே அரசாங்கத்தின் அறிவிப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

புதிய அரசியலமைப்பின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்தும் மேற்குலக நாடுகளின் சதித்திட்டத்திற்குள் இலங்கை பல வருட காலமாக சிக்குண்டுள்ளது. தற்போது அந்த சதித்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான புறச்சூழல் ஐ.நாவில் அமைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் புதிய அரசியலமைப்பிற்கான வரைவினை பாராளுமன்றத்தில் அரசாங்கம் முன்வைக்கவுள்ளது. அரசாங்கம் உத்தேசித்துள்ள புதிய அரசியல் அமைப்பானது நாட்டைப் பிளவுபடுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியைக் கொல்லச் சதி

## நாலகவை பாதுகாக்கிறது ஐ.தே.க விமலின் கட்சி பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்யத் திட்டம் தீட்டியதாக கூறப்படும் பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவை ஐக்கிய தேசியக் கட்சி பாதுகாக்க முற்படுகின்றதென தேசிய சுதந்திர முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.



மேலும், இந்த விவகாரத்துடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் பொலிஸ்மா அதிபரும், இவ்விடயத்தில் சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்தத் தவறிய சட்டம் ஒழுங்கு அமைச்சரும் பதவி விலக வேண்டும் எனவும் அக்கட்சியின் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கு 480 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவி

## அமெரிக்க அரசு முன்வருகை

### ஜனாதிபதி மைத்திரி நன்றி

(கொழும்பு)

ஐக்கிய அமெரிக்காவின் மில்லேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் 480 மில்லியன் அமெரிக்க டொலர்களை அதாவது சுமார் 8000 கோடி நிதியுதவியை இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்க முன்வந்துள்ளதாக அக் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி Brock Bierman தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 73ஆவது பொதுச்சபை அமர்வில் உரையாற்றுவதற்காக நியூயோர்க்கிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் பிற்பகல் சந்தித்தபோதே மில்லேனியம்சவால்கள் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியுதவியை வழங்குவதற்கான வரைவு ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதுடன், விரைவில் அதனை அமெரிக்க செனட் சபையின் அனுமதிக்காக முன்வைக்கவுள்ளதாகவும் Brock Bierman தெரிவித்தார்.

செனட் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் கொழும்பில் குறித்த உடன்படிக்கையில் கைச்சாத்திட எதிர்பார்ப்பதாக தெரிவித்த அவர், அச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பங்குபற்றுவாராயின் தாம் மிகுந்த மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்தார்.

அவரது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் நீண்டகாலமாக இலங்கைக்கு வழங்கிவரும் அபிவிருத்தி உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் இந்த நிதியுதவி தொடர்பில் பாராட்டு தெரிவித்த ஜனாதிபதி இலங்கை பயணிகள் போக்குவரத்து சேவையின் அபிவிருத்திக்கும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்குமான புதிய செயற்றிட்டமொன்றை அமுல்படுத்த குறித்த நிதியை முதலீடு செய்ய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர்கள் பாட்டலி சம்பிக்க ரணவக்க, திலக் மாரப்பன ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (இ-7)

# காணாமல்போனோர் அலுவலக பணியை குறைத்து மதிப்பிடுவதாக இலங்கை மீது 'சூக்கா' விமர்சனம்

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் உபகுழுவில் அமைச்சர் மகிந்த சமரசிங்க நியமிக்கப்பட்டமையை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான யஸ்மின் சூக்கா விமர்சித்துள்ளார்.



காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தை இலங்கை அரசாங்கம் குறைத்து மதிப்பிடும் விதத்தில் மகிந்த சமரசிங்கவின் நியமனம் அமைந்திருப்பதாக அவர் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றம் இடம்பெறவில்லை, பலவந்த காணாமல் போதல்கள் இடம்பெறவில்லை என மறுதலித்த அரசியல் வாதிகளை உபகுழுவில் உள்ளடக்கியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணாமல்போனோர் அலுவலகத்தின் பரிந்துரைகளைநிறைவேற்றுவதற்குகால எல்லை எதுவும் சுட் டிக்காட்டப்படாதநிலையில் உபகுழுவை அமைத்திருப் பது காலத்தை இழுத்தடிக்கும் உள்நோக்கமாக இருக் கலாம் என்றும் யஸ்மின் சூக்கா சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் பொறுப்புக் கூறும் விடயத்தில் சர்வதேச சமூகத்துக்கு காணப்படும் ஒரேயொரு நம்பிக்கையாக காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் இதுபோன்ற நியமனங்கள் கேலிக் கூத்தாக அமைகின்றன. காணாமல் போனோரின் எண்ணிக்கையில் ஈராக்குக்கு அதிகமானவர்களைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் பொறுப்புக்கூறும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் தனது முயற்சிகளை துறந்துவிடாமல் நம்பிக்கையுடன் முன்னெடுக்கும் சூழலையே ஏற்படுத்த வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# சிறைப் பாதுகாப்புக்கு புதிய வேலைத்திட்டம்

(கொழும்பு)

சிறைச்சாலைகளின் பாதுகாப்பு சம்பந்தமாக மிக விரைவில் புதிய வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த இருப்பதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கான திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சின் செயலாளர் மங்கலிகா அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற பல்வேறு மோசடிகளை தற்போது கட்டுப்படுத்த முடிந்திருப்பதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விசேடமாக சிறைச்சாலைகளுக்குள் கைத்தொலைபேசி பயன்படுத்துவதை கட்டுப்படுத்த முடிந்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு தரப்பினரின் ஒத்துழைப்புடன் அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக மங்கலிகா அதிகாரி மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மீள தலைதூக்கும் சைட்டம் பிரச்சினை

(கொழும்பு)

சைட்டம் பிரச்சினைக்கு தமது அரசாங்கத்தின் மூலம் தீர்வு வழங்கப்படுமென, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தபோதும், இதுவரை சைட்டம் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லையென, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இந்தப் பிரச்சினை குறித்து கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கமைய அவசர மத்தியக் குழு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சைட்டம் நிறுவனத்தின் தரம் மற்றும் ஏனைய காரணங்களை கவனத்தில் எடுத்து, அரசாங்கம் தொழில்நுட்ப அறிவுடன் கூடிய தனிநபர்களின் கூட்டு முயற்சியை அவதானித்து சைட்டத்தை தடை செய்வதற்கு முன்வரவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)



# 'கேல் ரத்னா' ஹோலி

## இந்., ஜனாதிபதி விருது வழங்கினார்

இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி, பளுதூக்குதல் வீராங்கனை மீராபாய் சானுவுக்கு 'கேல் ரத்னா' விருது வழங்கப்பட்டது.

சர்வதேச விளையாட்டு அரங்கில் சிறப்பாக செயல்படும் இந்திய நட்சத்திரங்களுக்கு இந்திய நாட்டின் உயரிய 'கேல் ரத்னா' விருது வழங்கப்படும். இதற்கு கிரிக்கெட் அணித் தலைவர் விராட் ஹோலி, பளுதூக்குதல் வீராங்கனை மீராபாய் சானு பெயர் பரிந்துரை செய்யப்பட்டது.

இதை மத்திய விளையாட்டு அமைச்சகம் ஏற்றுக் கொண்டது. இதற்கான, விருது வழங்கும் விழா நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடந்தது.

ஹோலிக்கும் மீராபாய் சானுவுக்கும் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் விருது வழங்கி கௌரவித்தார். இந்த விழாவில் ஹோலி மனைவி அனுஷ்கா சர்மா பங்கேற்றார். சச்சின் (1997), தோனிக்கு (2007) பின் கேல் ரத்னா விருது வென்ற மூன்றாவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமை பெற்றார்.

**நீரஜ் கௌரவம்**

இதைப்போல, நீரஜ் சோப்ரா (ஈட்டி எறிதல்), ஹிமா தாஸ் (தடகளம்) உள்ளிட்ட நட்சத்திரங்களுக்கும் அர்ஜுனா விருது வழங்கப்பட்டது. சிறந்த பயிற்சியாளர்களுக்கான துரோணாச்சார்யா விருதும் கொடுக்கப்பட்டது.

**மகிழ்ச்சியில் குடும்பம்**

ஹோலி விருது பெற்றதை காண இவரது தாயார் சரோஜ், மனைவியும் 'பொலிவுட்' நடிகையுமான அனுஷ்கா சர்மா, சகோதரர் விகாஷ் வந்திருந்தனர். இந்த தருணத்தை நேரடியாக கண்டு மகிழ்ந்தனர்.

# இந்., பெண்கள் வெற்றி



அனுஜா பாட்டீல்

இலங்கைக்கு எதிரான 4ஆவது 'ரி20' போட்டியில் ஜெமிமா ரொட்ரிக்ஸ், அனுஜா பாட்டீல் அரைச்சதம் கடந்து கைகொடுக்க இந்திய பெண்கள் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை வந்துள்ள இந்திய பெண்கள் அணி, 5 போட்டிகள் கொண்ட சர்வதேச 'ரி20' தொடரில் பங்கேற்கிறது.

முதல்மூன்றுபோட்டிகளின் முடிவில் இந்தியா 2-0 என முன்னிலை வகித்திருந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது போட்டி கொழும்புவில் நடந்தது.

'நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவி ஹர்மன்பிரீத் கவுர், களத்தடுப்பை தேர்வு செய்தார். மழையால் தலா 17 ஓவர் கொண்ட போட்டியாக நடத்தப்பட்டது.

**அனுஜா அசத்தல்**

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு யசோதா மெண்டிஸ் (19), ஹாசினி பெரேரா (10), நிலக்சி டி சில்வா (15) பெரிய அளவில் சோபிக்கவில்லை. பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் சமரி அத்தபத்து ஜெயாங்கனி (31), ஷசிகலா சிறிவர்தன (40) கைகொடுத்னர்.

இலங்கை அணி 17 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் அனுஜா பாட்டீல் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**ஜெமிமா அபாரம்**

சுலப இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு மிதாலி ராஜ் (11), ஸ்மிருதி மந்தனா (5), தானியா பாட்யா (5) ஏமாற்றினர். அபாரமாக ஆடிய ஜெமிமா ரொட்ரிக்ஸ், அனுஜா பாட்டீல், அரைச்சதம் கடந்து வெற்றிக்கு வித்திட்டனர்.

இந்திய அணி 15.4 ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்., எடுத்து வெற்றி பெற்றது. ரொட்ரிக்ஸ் (52), அனுஜா (54) ஆட்டமிழக்காமல் இருந்த னர்.

இதன்மூலம் 5 போட்டிகள்கொண்ட 'ரி-20' தொடரை இந் தியா 3-0 எனக் கைப்பற்றி முன்னிலையில் உள்ளது.

# என் கைகளில் உயிர் பிரிந்தது...

## தந்தை மரணம்... ஹோலி உருக்கம்

"தந்தையின் உயிர் எனது கைகளில் பிரிந்தது," என, ஹோலி உருக்கமாக தெரிவித்தார்.

இந்திய அணித் தலைவர் ஹோலி (வயது-29), சச்சின், தோனிக்குப் பின் விளையாட்டின் உயரிய 'கேல் ரத்னா' விருதை பெற்றுள்ளார். 2006ல் பெங்களூரு அணிக்கு எதிரான ரஞ்சி கிண்ண தொடரில் பங்கேற்றார். 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த இவர், மறுநாள் துடுப்பாட்டத்தை தொடர இருந்தார்.

அன்று இரவு தந்தை பிரேம் மரணம் அடைய, பலரும் ஹோலி விளையாட வரமாட்டார் என நினைத்தனர். ஆனால் கனத்த இதயத்துடன் களமிறங்கிய இவர், 90 ஓட்டங்கள் எடுக்க டில்லி அணி போட்டியை சமன் செய்தது. இது ஹோலியின் மனஉறுதியை காட்டியது.

இதுகுறித்து தனியார் ரிவி சனலுக்கு ஹோலி அளித்த பேட்டியில்,

பெங்களூரு அணிக்கு எதிராக 40 ஓட்டங்கள் எடுத்த பின், மறுநாள் துடுப்பாட்டத்தை தொடர்வது குறித்து ஆலோசித்தோம். இரவு 3:00 மணிக்கு வீடு திரும்பினேன். எனது தந்தை நெஞ்சு வலியால் துடித்தார். அருகில் இருந்தவர்களை அழைத்தேன், மருத்துவருக்கு போன் செய்தேன். இரவு என்பதால் யாரும் கண்டு கொள்ளவில்லை.

ஒரு வழியாக அம்புலன்ஸ் வந்தது. இதற்குள் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த எனது கைகளில் தந்தையின் உயிர் பிரிந்தது. இதன் பின் எனது உத்வேகம் அதிகரித்தது. கிரிக்கெட் அரங்கில் பிரகாசிக்க வேண்டும் என்ற தந்தை மற்றும் என் கனவு நனவாக கடுமையாக போராடினேன். இவ்வாறு ஹோலி தெரிவித்தார்.



# மத்யூஸ் நீக்கம்

இலங்கை அணியின் தலைமைப் பதவியில் இருந்து அஞ்சலோ மத்யூஸ் நீக்கப்பட்டார். இவருக்கு பதில் தினேஷ் சண்டிமல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆசிய கிண்ண தொடரில் மத்யூஸ் தலைமையிலான இலங்கை அணி சொதப்பியது. ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் போன்ற பலம்குன்றிய அணிகளிடம் தோற்று வெளியேறியது.

இதையடுத்து 'ரி20', ஒருநாள் போட்டிக்கான தலைமைப் பதவியில் இருந்து உடனடியாக விலகுமாறு மத்யூசை, இலங்கை கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டது.

அடுத்து நடக்க உள்ள இங்கிலாந்துக்கு எதிரான தொடரில், டெஸ்ட் உட்பட மூன்றுவிதமான போட்டிக்கும் சண்டிமல் தலைவராக இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த மத்யூஸ், ஒருநாள், 'ரி20' போட்டிகளில் இருந்து ஓய்வுபெறப் போவதாக எச்சரித்துள்ளார். இவர் கூறுகையில், "ஆசிய கிண்ண தோல்விக்கு 'பலிகடா' ஆக்கப்பட்டுள்ளேன்,"என்றார்.


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



### கந்தையா தம்பிராசா

ஓடி உருண்டது உமைப்பிரிந்து
ஓராண்டு
வாடி வதங்குகின்றோம் உமைப்பிரிந்து
எண்ணி நிதம்
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும்
எம் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள்
நிலைத்திருக்கும்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(3950)

குடும்பத்தினர்.
R.தீபன், T.திலீபா



## இதயத்தால் பாராட்டி வாழ்த்துகின்றோம்

### தேசகீர்த்தி
### ஞான திருக்கேதீஸ்வரன் J.P

(ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி
நிர்வாக இயக்குநர்
KTC கல்வி நிலையம், கோண்டாவில்)

அவர்கள் இன்று யாழ்.நீதிமன்றத்தில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்வதை ஒட்டியும் அண்மையில் சமூகசேவைக்காக "தேசகீர்த்தி" விருது பெற்றமையையும் மனமார வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகள் பெற இதயத்தினால் வாழ்த்துகின்றோம்.

கு.மதுசுதன் - உறுப்பினர், நல்லூர் பிரதேச சபை,
இயக்குநர் - Science planet, Kondavil

(C-3957)



யாழ்ப்பாணம் நல்லூர் சீரடி சாய் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் கொடியிறக்கம் நேற்று முன்தினம் மாலை சிறப்பாக நடைபெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு ஸ்கான், குருதி அழுத்தம் அளவிடும் கருவி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு டெங்குக் கட் டுப்பாட்டுப் பிரி வினரால் ஸ்கான் கருவி ஒன்றும், ஐந்து குருதி அழு த்தம் அள விடும் கருவிகளும் அண் மையில் வழங்கப்ப ட்டுள்ளன.

ஸ்கான் கருவி இன்று 26 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக கையளி க்கப்பட்டு செயற்படுத்த ப்படும் எனத் தெரிவிக் கப்படுகிறது. (இ-30)


பாராட்டி

வாழ்த்துகின்றோம்

திருமதி சுதர்சினி லங்கேஸ்வரன்



எமது பாடசாலை ஆசிரியை திருமதி சுதர்சினி லங்கேஸ்வரன் அவர்கள் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தை பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்த்தும் : அதிபர், ஆசிரியர்கள்

[யா/ புத்த கலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம்]

(3951)



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603,

021 567 1532



பாராட்டி வாழ்த்துகின்றோம்

வைத்திய கலாநிதி சோமசேகரம் லோகநாதன்

(சாமஸ்ரீ தேசமானிய, சமய ஆலோசகர்)



தேசிய அகில இலங்கை நல்லுறவு ஒன்றிய வடமாகாண முகாமையாளர் ஈழத்துச் சித்தர் லோகர் சுவாமி அவர்கள் மட்டக்களப்பு ஏறாவூரில் நடந்த பெரும் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பொழுது அவர் கௌரவிக்கப்பட்டு "கலாபூஷணம் யோகாசன தியானச்சுடர்" எனும் விருது வழங்கப்பட்டதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

(5780)

தேசிய அகில இலங்கை நல்லுறவு ஒன்றியம், இலங்கை.



பாராட்டி

வாழ்த்துகின்றோம்



திரு. பூதத்தம்பி கந்தப்பு இராசரத்தினம் J.P

(ஓய்வுநிலை அதிபர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வளர்ந்த இடமாகவும் கொண்ட பூதத்தம்பி கந்தப்பு இராசரத்தினம் (ஓய்வுநிலை) யா / நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி. யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. வட பிராந்திய கூட்டுறவுக் கல்லூரி ஆகிய பாடசாலை களின் முன்னைநாள் , அதிபராகவும் சிறந்த எழுத்தாளரும் மாணவர்களுக்கான சிறுகதைகள் (தமிழ்/ ஆங்கில) மொழி மூலம் நூல்களை எழுதியவரும் முன்னாள் கோப்பாய் கிராம சபைத் தலைவரும், கோப்பாய் வடக்கு பொது அமைப்புக்களில் பல உயர் பதவிகளை வகித்தவரும் சிறந்த கூட்டுறவாளரும் வலி.கிழக்கு தென்பகுதி / நல்லூர் ப.நோ.கூ.சங்க நெறியாளர் குழுத் தலைவர், உப தலைவர் பதவிகளை வகித் தவரும் யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் ஆட்சிக் குழு உறுப்பினரும் கோப்பாய் வடக்கு ச.ச.நிலையம் , சபாபதி நாவலர் சனசமூக நிலையத் தலைவரும் அரிமாக்கழகம் (Lons Club) மாவட்ட இணைப்பாளரும் சமயப் பணிகளில் புகுந்த இடமாகிய கோண்டாவில் பதி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பரிபாலன சபை செயலாளர்/ காப்பாளர் பதவி வகித்து திருப்தி கண்ட வடகோவையூர் லயன்ஸ் P.K. இராசரத்தினம் அவர்களின் சேவையை கருதி நீதி அமைச்சினால் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பட்டம் பெற்றமையை இட்டு ஊரவர் சார்பில் வாழ்த்துவதோடு அவர்களின் சேவை தொடரவும் தேக ஆரோக்கியம் கிடைக்கவும் இறை ஆசியை வேண்டுகின்றோம்.

(5788)

சமூக சேவா சங்கம், கோப்பாய் வடக்கு.



கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா:11<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L/அரச தொழில்<br>தொ.இ: B/527 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 39 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/1358 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 39 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/541 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 58செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/1362 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 55 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/553 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 48<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/1376 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 31<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/3913 | பிறப்பு: 1982RC<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 33செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/1377 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார உதவிக்கு நிதி ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார உதவிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க.கஜிதன் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு சபையின் மொத்த வருமானத்தில் நகரசபைக் கட்டளைச் சட்டங்களுக்கு அமைவாக வாழ்வாதார உதவியாக ஒரு குறிப்பிட்ட தொகை நிதியினை ஒதுக்க வேண்டும். அதன் ஊடாக சாவகச்சேரி நகரசபையின் 11 வட்டாரங்களுக்குமான செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டு பாதீட்டில் நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு சபையின் அனுமதியைக் கோரியுள்ளேன். நகர மக்களின் வாழ்வாதாரம் மற்றும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவு மாறு தவிசாளர் மற்றும் உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் சபையின் நிதிக் குழுவின் ஊடாக அறவிடப்படாது இருக்கும் சபையின் வருமானங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# தேர்த்திருவிழாவில் திருமுறையரங்கு

(மட்டக்களப்பு)

வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு "கொக்கட்டிச்சோலை" தான்தோன்றீஸ்வரர் ஆலய தேர்த் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 30 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் இடம் பெறவுள்ளது.

அன்றையதினம் சுவாமி தேரில் ஆரோகணித்த வேளை "பண்ணிசைப் பாவலன்" க.லோகேஸ்வரனின் திருமுறையரங்கு பக்க வாத்திய சகிதம் ஆலய பிரதான மண்டபத்தில் இடம்பெறும். (இ)

# நூற்றாண்டு விழாவும் நூல் வெளியீடும்

யாழ். சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா, நிறுவுநர் நாள், பரிசளிப்பு விழா, கணேசதீபம் நூல் வெளி யீட்டு விழா என்பன நாளை 27 ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் பா. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஆசியுரையை சித்தங்கேணி வீணாகான பீட குரு முதல்வர் வண.சிவ ஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் வழங்குவார்.

இதில் பிரதம விருந்தினர்களாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஸ்ணன், திருமதி குகா நந்தினி இராதாகிருஸ்ணன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் செ. சந்திரராஜாவும் கௌரவ விருந்தினர்களாக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார், நிறுவுநரின் பேரன் பழைய மாணவர் க.மகாதேவா ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிறுவுநர் உரையை ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்) ஜெ.அருள்மயம் வழங்குவார்.

கணேசதீபம் நூலினை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என். சண்முகலிங்கன் வெளியிட்டு வைப்பார். நூல் மதிப்பீட்டுரையை வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) க.சந்திரலிங்கம் வழங்குவார். (இ)

# சான்றுப்பொருட்களை உரிமை கோரவும்

(யாழ்ப்பாணம்)

கீழே குறிப்பிட்ட வழக்கிலக்கில் உள்ள சான்றுப் பொருட்களின் உரிமையாளர் யாராவது இருப்பின் அவர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து 26.09. 2018 ஆம் திகதிக்கு முன்னர் சான்றுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். தவறின் எவ்வித அறிவித்தலும் இன்றி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வழக்கு இலக்கம் AR/ 308/18. சான்றுப்பொருள் இலக்கம் 69/18. 6996 6980 பெண்கள் துவிச்சக்கரவண்டி, 69939294 பெண்கள் துவிச்சக்கரவண்டி, 69844968 பெண்கள் துவிச்சக்கரவண்டி, 69910270 பெண்கள் துவிச்சக்கர வண்டி, 69739316 பெண்கள் துவிச்சக்கரவண்டி, H23130 பெண்கள் துவிச்சக்கரவண்டி, 69 793751 பெண்கள் துவிச்சக்கரவண்டி, H611630 பெண்கள் துவிச்சக்கரவண்டி, LU024179 பெண்கள் துவிச்சக்கரவண்டி, 69859367 பெண்கள் துவிச்சக்கர வண்டி, 69928346 ஆண்கள் துவிச்சக்கரவண்டி, 69945071 ஆண்கள் துவிச்சக்கரவண்டி, 69918711 ஆண்கள் துவிச்சக்கரவண்டி, 561055 66 பெண்கள் துவிச்சக்கர வண்டி, 60958732 பெண்கள் துவிச்சக்கரவண்டி, LH 610926 பெண்கள் துவிச்சக்கர வண்டி, 86286 பெண்கள் துவிச்சக்கரவண்டி, 6994 6799 பெண்கள் துவிச்சக்கர வண்டி, 199042 ஆண்கள் துவிச்சக்கரவண்டி, 6932 3812 ஆண்கள் துவிச்சக்கர வண்டி. மன்றின் கட்டளைப் படி பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

# குளவிக் கொட்டுக்கு இலக்கான மூவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த மூவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை குளவிக் கொட்டுக்கு இலக்காகி சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். நாவற்குழியைச் சேர்ந்த கணவனும் மனைவியும் தமது காணியை பார்வையிடச் சென்ற போது குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இதில் கைதடி நாவற்குழியைச்சேர்ந்த 38வயது தஸ்ரீகாந், அவரது மனை வியான 31 வயது ஸ்ரீ.கிரிஷா ஆகியோர் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் கொடிகாமத்தைச் சேர்ந்த 71வயது வை.பூபதி என்ற முதியவரும் நேற்று முன்தினம் குளவிக் கொட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகிறார். (இ-30)



விழிப்புலனற்ற பிள்ளைகளின் ஊன்றுகோலாக கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றிவரும் கல்வி யங்காடு, த.சண்முகநாதன் பணியைப் பாராட்டும் முகமாக நல்லூர் சங்கிலியன் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற வைபவத்தில் முதன்மை விருந்தினராக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்துகொண்டு. 'சமூக ஜோதி' எனும் விருது வழங்கிக் கௌரவித்தார்.


# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு ஸ்ரீதர்

**(இ.போ.ச.சாரதி, கோண்டாவில்)**



நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஸ்ரீதர் நேற்று முன்தினம் (24.09.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-நாகேஸ்வரி தம்பதியரின் ஏக புத்திரனும் நிர்மலன், தமயந்தி, றோசா, பத்மினி, வேந்த ராஜா (லண்டன்), சதீஸ்குமார் (லண்டன்), மஞ்சுளா, ரகுவரன், திருவேணி, ராஜேஸ்வரன், ரோகினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், விக்கினேஸ்வரியின் (றதி) அன்புக் கணவரும், சஞ்சு, மிதுசன், ஆகியோரின் பாசமிகு தந்தையும், செந்தாஹரனின் அன்பு மாமனும், பிரணவன், சோபிதா ஆகியோரின் அன்புப் பேரனும்

திருச்செல்வம், பாலபாஸ்கரன், சத்தியசீலன், அருளேஸ்வரி, இலங்கேஸ்வரி, சிவகுமார், ரட்ணகுமார் ஆகியோரின் மைத்துனரும், பிரகாஷ் (லண்டன்), பிரதீப், பிரசாத் (லண்டன்), பிரதாப், பிரசாந், வேதிகா (லண்டன்), தர்சிகா (லண்டன்), சாரங்கன் (லண்டன்), உமாகாந் (லண்டன்), கரி (லண்டன்), டிலோஜா, சோபனா, நிரோஜன், பிரியதர்சன், விதுசன், துளசி, கவின், கவிசன் (லண்டன்), கிவிசன் (லண்டன்), கம்சன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.09.2018 இன்று புதன்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆரையம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாச்சிமார் வீதி,**
**நவாலி வடக்கு, நவாலி.**

(சி.என்-3949)

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 225 6839**


# இராசி பலன்

**மீனம்:** இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், கனவு பலிதமுண்டு.

**இடபம்:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | **இராசி பலன்** கிரகநிலை | | ராகு |
| செவ், கேது | சந்திராஷ்டமம் உத்தரம் காலை 7.01 மணிக்கு மேட-சந் | | |
| சனி | | குரு சுக் | சூரி, புத |

**26.09.2018**

புரட்டாதி 10, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 06.03 மணிக்கு

பிரதமை முற்பகல் 9.16 மணிவரை

ரேவதி பின்னிரவு 03.01 மணிவரை

சுபநேரம் 04.32-06.02 மணிவரை

இராகுகாலம் 12.02-01.32 மணிவரை

**வளவன்**

**கடகம்:** வாழ்க்கைத்தரம் உயர வழி வகை செய்வீர்கள், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மகரம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.


**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை தென்படும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.

**துலாம்:** பயணத்தால் ஆதாயமுண்டு, குடும்பத்தினர் இடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** குடும்பப் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும்.



**ஏகன்**

வன்ம உலகினில் வாழினும்
வந்த இனம் எம்மை ஆளினும்
சொந்த இனம் என்ன ஆகினும்
சொற்ப சலுகைக்காய் வாலாட்டும்
அற்ப உயிரிகள் வாழ் மண்ணிது
இங்கெப்படி நீ பிறந்தாய்?
இன்றைய தலைமுறை கேட்கிறது

பாடசாலை முதல்வனென்றால்
படித்தால் மட்டும் போதுமாம்
"அடுத்தவன் பாடு உனக்கெதற்கு?"
அடுக்கடுக்காய் காதில் விழும் தவறுகளை
தடுக்கும் வேளை வினை சூழுளளம்
விந்தை மண்ணிது
இங்கெப்படி நீ முதல்வனாய் இருந்தாய்
இன்றைய தலைமுறை கேட்கிறது

வரும் வைத்தியரெலாம் - ஏழை
வயிற்றிலடித்து வருமானம் சேர்க்கவும்
அரும்பும் தளிர் அது
பட்டம் பெற வேண்டுமெனில்- பகிடிவதை
சட்டம் என ஆகிவிட்ட மண்ணிது
இங்கேன் நீ மருத்துவம் துறந்தாய்?
இன்றைய தலைமுறை கேட்கிறது

"தமிழன்டா..."
"உரிமைகள் வேண்டும்..."
"விவசாயம் காப்போம்..." என
முகநூலில் மட்டும் முட்டி மோதும்
அறியாமையும் விளம்பரமும்...
திரும்பி பார்த்தால் களத்தில் யாருமில்லை
களத்தில் நிற்பவனிடம் கேள்வி
"உனக்கேன் இந்த வேலை?"
முகப்பு படம் மாற்றி போராடும்
முகநூல் போராளிகள் வாழ் மண்ணிது
இங்கேன் நீ போராடினாய்?
இன்றைய தலைமுறை கேட்கிறது

அதிகார போட்டிக்காய்
பல இலட்சம் உயிரை
பணயம் வைக்கும் உலகிது
சதிகார செயல் செய்து
சமயத்தில் தட்டிப் பறிக்கும்
கயவர் சூழ் உலகிது
அகிம்சை அதன் பொருளறியா
அறிஞர்கள் ஆளும் மண்ணிது
இங்கேன் நீ அகிம்சையை நாடினாய்
இன்றைய தலைமுறை கேட்கிறது

எமனிற்கே சவால் விடும்
எம் சலுகைத் தலைவர்கள்
உயிருள்ள வரை எமை விற்க
உதவிக்கு யாருமில்லை
பதவிக்காய் பணிந்து நிற்க
கொள்கையிலா கோட்டில் எம் தமிழினம்
நெற்றிக் "கண்" திறக்க
சிவனில்லை என பெருகிவிட்ட
சீரழிவு செறி மண்ணிது
இவர்களுக்காய் ஏன் நீ ஊனினை உருக்கி
உள்ளொளி பெருக்கி
வெள்ளொளியாய் எமை ஆக்க நினைத்தாய்?
கேட்கிறது இன்றைய தலைமுறை

மேற்கூறியவர்கள் அனைவரிலும்
விதிவிலக்காய் சிலருண்டு
அவர்களின் அண்ணனாய் நீ!

# இருள் சூழ்ந்த தேசத்தில் மெழுகாய் உருகி ஒளி தந்தவன் திலீபன்



இன்று புரட்டாதி 26. இன்றைய நாள் ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் ஓர் மகத்தான நாள். ஈழத்தமிழர்கள் பயங்கரவாதிகள் என்றும் ஆயுதப் பிரியர்கள் என்றும் அவர்கள் மீது பூசப்பட்டிருக்கும் மிகவும் மோசமான ஒரு கறையினை நீக்கி ஈழத் தமிழர்களும் அகிம்சையின் வழியிலே நின்றவர்கள். அகிம்சைமீது தளராத நம்பிக்கை கொண்டிருந்தவர்கள். தளராத நம்பிக்கை என்பது அவர்களின் இதயத்தின் இறுதி துடிப்பு அடங்கும் வரைக்கும் அகிம்சைமீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை துளி அளவுகூட தளர்வடையவில்லை என்ற ஒரு வரலாற்று உண்மையினை உலகிற்கு உணர்த்திய நாள்.

இன்றுதான் இளமைத்துடிப்பும் எத்தனையோ கனவுகளும் மிகுத்த ஓர் இளம் தளிர் ஒன்று ஈழத் தமிழர்களின் கண் முன்னே பட்டினித் தீயிலே கருகிப்போனது. இன்றுதான் தியாக தீபம் அகிம்சாவாதத்தின் விடிவெள்ளி ஈழத்தமிழர்களின் வானத்தை விட்டு மறைந்து போன நாள்.

மரணம் என்பது மனிதனுக்கே தவிர அது மாவீரனுக்கு என்றும் இல்லை. இது வரலாறு சொல்லும் உண்மை. பிறர் வாழ தன் உயிரை தியாகம் செய்கின்றவர்கள் வரலாற்றில் என்றுமே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்!!

ஈழத்தமிழர்களின் வரலாற்றிலே ஒரு பாரிய சோகத்தினையும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் பேரெழுச்சிக்கும் முக்கியமான ஒரு காரணியாகவும் அமைந்தது.

தீலீபனின் இழப்பு அகிம்சை ரீதியாக போராடினால் உரிமைகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும் உலகத்தில் அகிம்சைதான் சிறந்த ஒரு ஆயுதம் என்றும் வரையப்பட்ட வசனம் நல்லூரான் வீதியிலே பொய்யாகிப்போனது.

ஒரு இனத்தின் விடியலுக்காக அந்த இனத்தின் விடுதலைக்காக தன் உயிரையே தியாகம் செய்யும் அளவிற்கு இன்றைய நவீன உலகில் மனிதர்கள் யாரும் இல்லை .

புத்தனின் புனிதபூமி என்றும் காந்தியின் தேசம் என்றும் உலகத்தில் தன்னை உயர்த்திக்கொள்ளும் இந்தியாகூட திலீபனின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

இளமையும் துடிப்பும் மிக்க அந்த இளைஞனுக்கு எப்படி இவ்வளவு தியாக உணர்வும் அகிம்சைமீது விருப்பும் சாகும் வரையிலும் அதன்மீது தளராத நம்பிக்கையும் வந்தது என்று தெரியவில்லை. ஆனால் அந்த அகிம்சையே அவனுக்கு எமனாகியது என்பது வேதனையான விடயம்.

திலீபன் அப்படி எதைக் கேட்டான் திலீபனின் கோரிக்கைகள்தான் என்ன? மனிதகுலத்துக்கே ஒவ்வாத ஒன்றைக் கேட்டானா? அவன் கேட்டது நியாயமானது. அவனது கோரிக்கைகள் அத்தனையும் சிங்கள இனவாதபூதங்களால் அழிக்கப்பட்டுக்கொண்டிருந்த தமிழ் மக்களின் விடுதலைக்கானது. தனது இனம் இன்னொரு இனத்தினால் அழிக்கப்பட்டு சித்திரவதைப்படுவதைக் கண்டு அவர்களின் விடியலுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அதனை ஏற்றுக்கொள்ளும் வரையும் உணவின்றி, நீரின்றி நல்லூரான் வீதியிலே பட்டினியால் துடித்து உயிர்விட்டான் அந்த உத்தமன்.

இதிலே மிகவும் கொடுமையான விடயம் அகிம்சைக்கே ஆசானாக தன்னை காட்டிக்கொள்ளும் இந்திய தேசத்திடமே தியாகதீபம் தனது கோரிக்கைகளை முன்வைத்து அறப்போரை தொடுத்திருந்தான். அப்படி அவன் எதைக்கேட்டான். மனித குலத்திற்கு ஒவ்வாத விரோதமான எதையாவது கேட்டானா?

அவனது ஐந்து கோரிக்கைகளிலே ஒன்றைக்கூட இன்றுவரைக்கும் நிறைவேற்றமுடியாதவர்கள் அகிம்சை பற்றி பேசுவது பொருத்தமற்ற. கேலிக்கிடமான செயற்பாடாகும். இந்திய தேசத்திடம் அவன் முன்வைத்த கோரிக்கைகள்.

- மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
- சிறைக்கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.
- அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.
- ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.
- தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

விடுதலைப்புலிகள் வன்முறை யாளர்கள் என்றும் அவர்கள் பயங்கரவாதிகள் என்றும் முத்திரை குத்திய இந்தியா உட்பட உலகநாடுகள் அனைத்தும் அன்று திலீபனின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்திருந்தால். அவனின் அகிம்சை வெற்றிபெற்றிருந்தால் இன்று இந்த அளவிற்கு ஆயுதக் கலாசாரம் வளர்ச்சியடைந்திருக்காது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை திலீபனுடன் அகிம்சையும் மரணித்துப் போனது என்பதுதான் உண்மை. எனவே தான் அவர்கள் ஆயுதங்கள் மீது நம்பிக்கை கொள்ளவேண்டியிருந்தது.

திலீபன் இந்த மண்ணை விட்டுச் சென்று 31 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் இன்னமும் அவனது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அகிம் சையினை நம்பி மரணித்த அந்த மாவீரனின் இழப்புக்கு காரணமான இந்தியா அதற்காக மன்னிப்பும் கேட்க வில்லை. ஒருசிறிய ஆதங்கத்தைக்கூட வெளிப்படுத்தவில்லை.

இந்தியா தனது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளும் என்று ஆழமாக நம்பிய திலீபனை இந்தியாவின் மௌனமும் பொறுப்பற்ற தன்மையும் கொன்று போட்டது.

மரணப்படுக்கையிலே திலீ பன் சொன்னதுபோல மக்கள் புரட்சி ஒன்று வெடிக்கட்டும். ஒன்றுபட்ட தமிழ்ச் சமூகத்தின் குரல் ஓங்கி ஒலிக்காவிடின் ஒட்டுமொத்த தமிழினத்தின் குரல் வளையினை ஆதிக்க சக்திகள் நசுக்கி விடும்.

சுயநலமற்ற மனிதர்களாக மண்ணிலே வாழும்வரை சுயமரியாதையுடன் வாழ சுதந்திரக்காற்றினை சுவாசிக்க தியாக தீபம் திலீபனை மனதில் நிறுத்துவோம்.

## மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில்

# அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் விசேட சத்திரசிகிச்சை நிலையம் திறப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சுமார் 12 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்ட விசேட சத்திரசிகிச்சை நிலையம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் வைபவ ரீதியாக திறந்துவைத்தார்.

## நடமாடும் பற்சிகிச்சை பேருந்து கையளிப்பு





அதனைத் தொடர்ந்து OpenE நிறுவனத்தின் பங்களிப்பில் அவுஸ்திரேலியாவைத் தளமாக்கொண்ட 'My Dental Team' அமைப்பினூடாக இலங்கையைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவை வதிவிடமாகக் கொண்ட எம்.ரூத்திரன் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட சுமார் 10 மில்லியன் ரூபாய் பெறுமதியான அதி நவீன வசதிகளுடன் கூடிய "நடமாடும் பற்சிச்சை சேவை வாகனம்" நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து எம்.ரூத்திரனினால் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து குறித்த "நடமாடும் பற்சிச்சை சேவை வாகனம்" மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கில்றோயிடம் கையளிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து இடம் பெற்ற நிகழ்வில் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகக் கொண்ட எம்.ரூத்திரன் உட்பட விருந்தினர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வுகளில் மன்னார் பதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கில்றோய், மன்னார் வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் ஒஸ்மன் டெனி, வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், வைத்தியசாலை மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கசிப்புடன் ஏழு பேர் கைது

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கசிப்புடன் கைதுசெய்த ஏழு பேரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த மூன்று நாட்களாக புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது உடைமையில் கசிப்பு வைத்திருந்த ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தில் இரண்டு லீற்றர் கசிப்புடன் ஒருவரும்,375 மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவரும் 3லீற்றரும் 750 மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவரும்,1500 மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவருமாக நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

விசுவமடு பகுதியில் 3000 மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவரும் 375 மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவருமாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

வள்ளிபுனம் பகுதியில் 2000 மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவரும் கைதுசெய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (2-281)





வவுனியா கோவில் குளம் ஸ்ரீ மஹா விஸ்ணு ஆலய வருடாந்த பிரம்மோற்சவத்தில் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக இடம்பெற்றது. இதன் போது முற்பகல் பத்து மணியள்வில் உள்வீதி வலம் வந்து 10.30 மணியளவில் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீமஹா விஷ்ணு பகவான் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள் பாலித்தார்.




# கசிப்பு காய்ச்சிய இடம் சுற்றிவளைப்பு

## மூவர் கைது



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட மூங்கிலாறு வடக்கு ஆற்றுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு காய்ச்சி வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போது பாரியளவில் கசிப்பு காய்ச்சிவந்த இடத்தை சுற்றிவளைத்து அதில் இருந்த மூவரை கைதுசெய்துள்ளார்கள்.

இதன்போது 25 லீற்றர் கசிப்பு மூன்று பெரல், கோடா என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் அதனை காய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்ட மூங்கிலாற்று பகுதியைச் சேர்ந்த மூவரையும் கைதுசெய்துள்ளார்கள்.

இவர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (2-281)

# குழாய்க்கிணறு சேதம்; முறையிடப்பட்டும் இதுவரை திருத்தம் செய்யப்படவில்லை

(பனிக்கன்குளம்)

வவுனியா நகர மத்தியிலுள்ள குழாய்க்கிணறு நகரசபையினால் திருத்தி அமைக்கப்பட்டு அண்மையில் மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்ட நிலையில் திரும்பவும் சேதமடைந்து 20 நாட்களாகியும் திருத்தப்படவில்லை. திருத்தி அமைத்துத்துதருமாறு நகர சபையினரிடம் கோரியபோது எழுத்து மூலம் கடிதம் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர சபை உப தவிசாளர் சு.குமாரசாமியிடம் முறையிடப்பட்டபோதும் இன்றுவரையில் திருத்தப்படவில்லை என்று பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது, வவுனியா நகர மத்தியில் கொப்பேகடுவ சிலைக்கு அருகே காணப்படும் குழாய்க்கிணறு நீண்டகாலமாக திருத்தி அமைக்கப்படாமல் இருந்துள்ளது.

இதையடுத்து பலரின் முறைப்பாடுகளின் பலனாக அக்கிணறு கண்டுபிடிக்கப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டது. (2-281)

கிளிநொச்சி பரந்தன் நகரத்துக்கான புதிய பேருந்து நிலையத்தை நிர்மாணிக்கும் பணிகள் நேற்று ஆரம்பமாகியது. சுமார் 04 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட இருக்கிற இந்த பேருந்து நிலையத்துக்கான அடிக்கல் நேற்று நண்பகல் 12 மணியளவில் நாட்டி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில்







வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன், உப தவிசாளர், உறுப்பினர்கள், அப் பிரதேச அமைப்பினர் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

# 387 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு

# மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியூடாக ஏழு செயற்றிட்டங்கள் முன்னெடுப்பு

## கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 387 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 3.86 மில்லியன் ரூபாய் செலவில் ஏழு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயச் செய்கையை விருத்தி செய்யும் வகையில் பல்வேறு நிதியீட்டங்கள் ஊடாக பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின்கீழ் ஏழு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது, 3.86 மில்லியன் ரூபாய் செலவில் 387 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்ட அவர்,

உவர் நிலங்களில் நெற்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு உவர் நிலப்பயிர் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 0.74 மில்லியன் ரூபாய் செலவில் விதை நெல் வழங்கப்பட்டுள்ளது.

கைவிடப்பட்ட காணிகளில் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் 205 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு உழுந்து, நிலக்கடலை, பயறு மற்றும் விவசாய உபகரணங்கள் 0.947 மில்லியன் ரூபாய் செலவில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதேபோல வெங்காயத்திற்கான கொட்டகைகள் அமைத்தல் போன்ற பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# 4 மில்லியன் ரூபாய் செலவில் பரந்தன் பேருந்து நிலையத்துக்கான புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரந்தன் பேருந்து நிலையத்திற்கான புதிய கட்டடம் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 4 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் உப நகரமான பரந்தன் நகரத்தின் பேருந்து நிலையம் வசதிகளற்ற நிலையில் காணப்பட்டதுடன், இதில் நவீன வசதிகள் கொண்ட




பேருந்து நிலையம் ஒன்றை அமைக்குமாறு பரந்தன் நகர வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், தற்போது மாகாண குறித்தொதுக்கப்பட்ட விசேட நிதியொதுக்கீட்டின் கீழ் 4 மில்லியன் ரூபாய் செலவில் பரந்தன் நகருக்கான பேருந்து நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் தற்போது துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை பரந்தன் நகரப் பகுதியில் எட்டு மில்லியன் ரூபாய் செலவில் நவீன வசதிகள் கொண்ட கழிப்பறைத்தொகுதியும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# ஆலயச் சுவர் விசமிகளால் சேதம்; நிர்வாகத்தினர் பொலிஸில் முறைப்பாடு

(மன்னார்)

மன்னார் கருசல் புனித கப்பலேந்தி மாதா ஆலய வளாகத்தின் சுவர்களில் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு இனம் தெரியாத விசமிகளால் "எங்க ஊரு" "எங்க கெத்து" என எழுதப்பட்டு சுவர்கள் சேத மாக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை முறைப்பாடு செய்துள்ளனர்.

நீண்டகாலமாக குறித்த ஆலயம் பல்வேறு தாக்குதல் சம்பவங்களுக்கு முகம்கொடுத்து வந்துள்ள நிலையிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மைய திருவிழாவின் போது இந்த மதில்கள் புனரமைப்பு செய்யப்பட்டு அழகான முறையில் அமைக்கப்பட்ட நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாகம் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதோடு, குறித்த செயற்பாட்டினை கருசல் புனித கப்பலேந்தி மாதா ஆலய நிர்வாகம் வன்மையாகக் கண்டித்துள்ளது. (2)

# விதைநெல் பெற்றுக்கொள்வதற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கண்டாவளை)

வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதைநெல் பெற்றுக்கொள்வதற்கும் அதற்கான நிதியைப்பெற்றுக் கொள்வதற்கும் ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளபோதும், இதுவரை எந்தவிதமான பதில்களும் கிடைக்கவில்லை என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக வடக்கு மாகாணத்தில் நிலவுகின்ற வரட்சி காரணமாக விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பாதிப்புக்களால் விவசாயிகள் தமக்கான விதை நெல் இல்லாத நிலையில் பெருமளவான விவசாயிகள் காணப்படுகின்றனர்.

தற்போது காலபோக செய்கைக்கான முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும், தமக்கான விதை நெல் பெற்றுத்தர விடுத்த கோரிக்கையை எவரும் செவிசாய்க்கவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வடக்கு மாகாண விவசாய அமைச்சரிடம் இது தொடர்பாக வினவியபோது, கடந்த மூன்று வருடங்களாக இந்த வரட்சி நிலைமை நீடிக்கின்றது, இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்களுக்கான விதை நெல் பெற்றுக்கொள்வதிலும், அதற்கான நிதி பெற்றுக்கொள்வதிலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சர், ஏனைய சகல தரப்பினரிடமும் எழுத்து மூலம் இந்தக்கோரிக்கையை முன்வைத்திருக்கின்றோம். ஆனால் எந்தவொரு சாதகமான பதிலும் கிடைக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# வரவு-செலவு திட்டத்தில் பிரதேசத்திற்கு வழங்கப்படும் நிதியை மத்திய அரசிடம் மீண்டும் ஒப்படைக்காதீர்கள்

## சாள்ஸ் எம்.பி.வலியுறுத்து



(மன்னார்)

சிறு கைத்தொழில் முன்னேற்றத்திற்கு என கூட்டுறவு திணைக்களத்திற்கு ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி 2018 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது செப்டெம்பர் மாதம் நடைபெறுகிறது. டிசெம்பர் மாதத்திற்கு முன்பு அந்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னார்மேற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் அங்கத்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை பேசாலையில் அமைந்துள்ள மன்னார் மேற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தில் இடம்பெற்றது.

இதன்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வருட இறுதிக்குள் ஆரம்பிக்கும் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்காதுவிட்டால் அந்த நிதி இல்லாமல் திரும்பிப் போய்விடும். இதுதான் நாட்டில் இருக்கின்ற வரவு-செலவுத்திட்ட நடைமுறையின்படி அபிவிருத்திகளுக்காக நிதியொதுக்கப்பட்டு அந்த நிதி மக்களால் அல்லது அந்த திணைக்களத்தால் பயன்படுத்த அல்லது நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அந்நிதி மீளவும் அரசிடம் சென்று விடும்.

அதற்கு அரசை குறை சொல்லி பிரியோசனம் இல்லை. ஏனெனில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அதற்குரிய முன்மொழிவை கொடுத்து அந்தப் பணத்தை பெற்றுக்கொள்வதற்குரிய வழிவகைகளை செய்ய வேண்டும். இந்த ஆயிரம் மில்லியன் ரூபாய் வடக்கு மாகாண கூட்டுறவு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. அதை மக்கள் பயன்படும் வண்ணம் செயற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் சங்கத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளில் புலமைப்பரிசிலில் நூறு புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கும் பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களுக்கும் சிறந்த அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் மேலும் சங்க வளர்ச்சிக்காக உழைத்து ஓய்வுபெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரி மூஸ் சிராய்வா, வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் உட்பட சங்க நிர்வாகிகள், மதத்தலைவர்கள் மற்றும் சங்க உறுப்பினர்களின் குடும்பத்தினரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# புகைப் பரிசோதனைச் சிட்டை காண்பிக்கத் தவறினால் தண்டம்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் அண்மைய நாட்களாக மோட்டார் சைக்கிளில் செல்லுபவர்களிடம் போக்குவரத்துப் பொலிஸார். புகைப்பிரிசோதனைச் சிட்டையைக் கோரி வருவதுடன் அதனைக்காண்பிக்கத் தவறினால் உடனடியாக 500 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டு தண்டப்பணம் சிட்டை வழங்கப்பட்டு வருகின்றது.

வவுனியாவில் செட்டிகுளம் பகுதியிலேயே கடந்த வாரம் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்தவரிடம் மோட்டார் சைக்கிளுக்கு மேற்கொள்ளப்பட்ட புகைப்பரிசோதனைச் சிட்டையை காண்பிக்குமாறு போக்குவரத்துப் பொலிஸார் கோரியுள்ளனர். மோட்டார் சைக்கிளில் செல்பவர் தம்து சாரதி அனுமதிப்பத்திரம், வாகன வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பனவற்றையே தம் வசம் எடுத்துச் செல்கின்றனர். இதனையே பலர் நடைமுறையாக மேற்கொண்டும் வருகின்றனர்.

தற்போது பொலிஸார் புதிய நடைமுறையைப் பின்பற்றி வருகின்றதால் பல பிரச்சினைகளுக்கு பொதுமக்கள் முகம் கொடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் வாகன வரி அனுமதிப்பத்திரத்திற்கு புகைப் பரிசோதனைச் சிட்டை வழங்கப்பட்ட பின்னரே வரி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு புகைப் பரிசோதனை சிட்டையை பொதுமக்கள் காண்பிக்க வேண்டும் என்று பொலிஸார் முன்னறிவிப்புக்கள் எதனையும் விடுக்கவில்லை. அதற்கான கால அவகாசம் எதனையும் வழங்கவில்லை. மோட்டார் சைக்கிளில் செல்பவர்களை இடைமறித்து புகைப் பரிசோதனை சிட்டையைக் கோரி வருவதால் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த தண்டம் அறவிடப்படுவதால் தமக்கு பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றதாகவும் பொதுமக்கள் குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளனர்.

பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், தனியார் வகுப்புக்களுக்குச் செல்லும் மாணவர்கள், வைத்தியசாலை போன்ற அத்தியாவசியத் தேவைகளின் நிமித்தம் செல்லும் மக்களும் இப்புதிய சட்டத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# சரியான முறையில் வாழ்ந்தால் மனிதவுரிமை அவசியமில்லை

## கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு அமைச்சர் மங்கள கடும் எதிர்ப்பு

(கொழும்பு)


மரணதண்டனையை நாட்டில் மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில மாதங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தபோது அதனை ஆமோதித்து வரவேற்றிருந்த கர்தினால் மல்கம் ரஞ்சித் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தார். கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தை பாப்பரசர் பிரான்ஸிஸ் மரண தண்டனை வேண்டாம்என்று திருச்சபையின் நிலைப்பாட்டை வலியுறுத்திவரும் நிலையிலேயே கர்தினால் மல்கம் ரஞ்சித் மரண தண்டனையை வரவேற்றிருந்தார்.

தற்போது கர்தினால் ரஞ்சித் சரியான முறையில் வாழ்ந்தால் மனித உரிமைகள் அவசியமில்லை என்ற கருத்தை வெளியிட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

ஏகல பிரதேசத்திலுள்ள புனித மத்தியுஸ் கத்தோலிக்க தேவாலயத்தில் காலை நேர வழிபாடுகளில் பங்கேற்றபோதே கர்தினால் ரஞ்சித் இந்தக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.


"மனிதவுரிமைகள் என்பது மேற்குலகத்தினர் மத்தியில் ஒரு மதமாக மாறியுள்ளது. மனித உரிமைகள் என்பது அண்மையிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. நாம் சரியான முறையில் மதங்களைப் பின்பற்றுவோமானால் மனித உரிமைகளுக்கு அவசியமில்லை.



மதங்களைப் பின்பற்றாதவர்களே மனித உரிமைகளில் தொங்கிக்கொண்டு நிற்கின்றனர். இவர்களது மயக்கும்செயற்பாடுகளால் நாம்ஏமாற்றப்படக்கூடாது. நாம் அறிவுடன் நடந்து கொள்ள வேண்டும்"

பல நூற்றாண்டுகளாக பன்மதங்களினூடாக மனித உரிமைகளை கடைப்பிடித்துவாழும் இலங்கைக்கு மேற்குலகினர் மனித உரிமைகளைக் கற்பிக்க முற்படுவதாகவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

மனித உரிமைகள் தொடர்பான கர்தினாலின் கருத்திற்கு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். கர்தினால் ரஞ்சித் எப்போதுமே தன்னைப் பிரபல்யப்படுத்திக் கொள்வதற்காக பிழையான பக்கத்தில் நிற்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


Mangala Samaraweera
@MangalaLK

The need for #HumanRights was an outcome of the marauding religious zealots of the Inquisition & the Crusades,where non believers were massacred "En-Bloc".Pity, the Cardinal always seems to get things wrong in trying to be a populist
dailymirror.lk/article/Human- #lka
9:39 PM - Sep 24, 2018

Human rights is the latest religion among ...
Human rights is the latest religion among Western nations: Archbishop , Archbishop Cardinal Malcolm Ranjith today said that the
dailymirror.lk

♡ 145 ◯ 99 people are talking about this

# நாட்டின் சிறந்த அபிவிருத்திக்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்



(கொழும்பு)

அரசியல் குரோதங்களை மறந்து, நாட்டின் சிறந்த அபிவிருத்திக்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தேர்தல் காலங்களில் விரும்பியவர்களைத் தெரிவு செய்யுங்கள்.

அரசியலை ஒருபுறம் தள்ளி நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அமைச்சர் துமிந்த திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார். (இ)

# நோயாளர்களுக்கு கண்ணில் பாதிப்பு விசாரணைக்குப் பணிப்பு

(ஹற்றன்)

நுவரெலியா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளர்களுக்கு, பார்வைக் குறைபாடு ஏற்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்கவுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் 73 ஆவது பொதுச் சபை மாநாடு உள்ளிட்ட அரச வைபவங்கள் பலவற்றில் கலந்து கொள்வதற்காக, ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்குச் சென்றுள்ள அமைச்சர் ராஜித, நுவரெலியா வைத்தியசாலை விவகாரம் தொடர்பில் அறிந்துகொண்டதன் பின்னர், அவசர அலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

நுவரெலியா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காக, கடந்த 17 ஆம் திகதி வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர், அவர்களுள் 23 பேர் பார்வை இழந்ததைத் தொடர்ந்து, அவர்கள் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குச்செலுத்தப்பட்ட ஊசியாலே, பார்வை இழப்பு ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது.

பார்வைக் குறைபாட்டுக்கு, நீரிழிவு நோய், உயர் குருதி அழுத்தம் உள்ளிட்ட நோய்களும் மிக முக்கிய காரணம் என்பதால், பார்வைக் குறைபாடுகளுக்காக வரும் நோயாளிகளுக்கு, பார்வைக் குறைபாட்டுக்கு சிகிச்சை அளிப்பதற்கு முன்பாக, நீரிழிவு நோய், உயர் குருதி அழுத்தம் உள்ளிட்ட நோய்களுக்கே முதலில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதற்கமைவாகவே, மேற்படி நோயாளர்களுக்கும், நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஊசி ஏற்றப்பட்டுள்ளது. இந்த ஊசியை ஏற்றியதன் பின்னர், மேற்படி 23 பேரும் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட மேற்படி நோயாளர்கள், பார்வையை முற்றாக இழந்துள்ளதுடன், அவர்களது கண்களிலிருந்து கண்ணீர் வடிய ஆரம்பித்துள்ளது. அதன் பின்னர் மேற்படி அனைவரும், உறவினர்களின் உதவியுடன் மீண்டும் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, வைத்தியசாலை நிர்வாகம் மேற்படி 23 பேரையும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதுடன், வைத்தியர்களின் நேரடிக் கண்காணிப்பில், கடந்த ஒரு வாரமாக, தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இதனால், இவர்களது கண்பார்வை, ஓரளவுக்குத் திரும்பியுள்ளதென, நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அநுர ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலதிக சிகிச்சைகள் உரிய முறையில் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், இது தொடர்பில் சுகாதார அமைச்சால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

அத்தோடு, குறித்த ஊசியை, ஏனைய நோயாளர்களுக்கும் செலுத்துவது, இடைநிறுத்தப்பட்டுள்ளதெனவும் எனினும், இவ்வாறான சம்பவங்கள், ஏனைய வைத்தியசாலைகளில் பதிவாகவில்லை என்று, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எனினும், ஊசி ஏற்றப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாரதூரமான நிலையைக் கருத்திற்கொண்டு, நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில், மேற்படி ஊசி வகைகளைத் தற்போதைக்குப் பயன்படுத்த வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளதென, சுகாதார அமைச்சின் வைத்தியர்கள் பிரிவின் பணிப்பாளர் லால் பனாபிடிய தெரிவித்தார். (இ-7)

# வலய மட்டத்திலும் சாதித்தது கெருடாவில் இ.த.க.பாடசாலை



(யாழ்ப்பாணம்)

அண்மையில் வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட வலயமட்ட ''செயற்பட்டு மகிழ்வோம்'' போட்டியில் கலப்பு அணிப் பிரிவில் யா/கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

அதிபர், நெறிப்படுத்திய ஆசிரியருடன் வெற்றியீட்டிய மாணவர் குழாம். இவ்வணி கோட்ட மட்டத்திலும் முதல் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பேருந்துப் பயணக் கட்டணம் தொடர்பில் புதிய அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய பேருந்து கட்டண கொள்கையை மீறி எரிபொருள் விலையேற்றம் செய்யப்பட்டால் பேருந்து பயணக் கட்டணத்திலும் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் அதிகரிக்கப்படும் எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக நேற்று முன்தினம்திங்கட்கிழமை ஆணைக்குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது தேசிய பேருந்து கட்டண கொள்கையை மீறி எரிபொருள் விலையேற்றம் மேற்கொள்ளப்படுகின்றது. இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதென ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.பீ.ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

இதனால் எரிபொருள் விலையேற்றம் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் பேருந்து பயணக் கட்டணத்தையும் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளர் யாரென மகிந்தவே இறுதி முடிவெடுப்பார்

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பொது வேட்பாளர் யார்? என்ற இறுதி முடிவை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே தீர்மானிப்பார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்தலைவர்ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

ஜனாதிபதி தேர்தலுக்கு 14 மாதங்களே இருக்கின்றன. ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ யாரை பரிந்துரை செய்கின்றாரோ அவரை நாம் ஏற்றுக்கொள்வோம்.

கட்சிக்குள் எந்த பிளவும் இல்லை. எனினும் வேட்பாளர் யார் என் அறிவிக்கும் வரை கட்சியில் உள்ளவர்கள் அவ்ரவருக்கு விருப்பமான வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிப்பார்கள்.

எனவே எமது அணியில் உள்ள அங்கத்துவக் கட்சி தலைவர்கள் இடையே எவ்வித முரண்பாடுகளும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நட்சத்திர மூலிகையின் மருத்துவப் பண்புகள்


டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**மகம் நட்சத்திரம் (ஆலமரம்)**

இவர்களுக்குரிய மரம் ஆலமரம். இதன் தாயகம் இந்தியா. விழுதுகளாக இதன் வேர்கள் மரக்கிளைகளிலிருந்து படரும்தன்மைகொண்டது. ஆலமரத்திற்கு கற்பக விருட்சம் என்று பெயர். ஸ்ரீ தட்சணாமூர்த்தி அமர்ந்த கோலத்தில் சன்காதி முனிவர்களுக்கு உபதேசிக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனி பௌர்ணமி அன்று இம்மரத்தை வழிபடுவது நடைபெற்று வருகிறது.

இம்மரத்தின் இலை, பட்டை, வேர், பால் என அனைத்தும் மருத்துவத்திற்கு பயன்படுகின்றது.

இதன் பிராணவாயுவும் அரசமரத்தைப் போல் எதிர்மறை எண்ணங்களை கட்டுப்படுத்தக் கூடியது.

ஆலம் விழுதும் பழமும் சம அளவு அரைத்து 30 கிராம் அளவு நாளும் பாலில் கலந்து40-120 நாள் சாப்பிட உடல் ஊட்டம் பெறும். ஆண் மலட்டுத் தன்மையையும் நீக்கக் கூடியது. பழத்தை உலர்த்திய தூள் 10 கிராம் பாலில் கலந்து சாப்பிட மேற்படி பலனைக் கொடுக்கும். கனிகளை உலர்த்திபொடித்து 2-4 கிராம் அளவு வெந்நீரில் கலந்து இரவில் கொடுக்க மலச்சிக்கல் குணமாகும்.



**பூரம் நட்சத்திரம் (பலாசு மரம்)**



இவர்களுக்குரிய மரம் பலாசு. இதன் மரப்பகுதி அழுக்குப்படிந்த வெள்ளை நிறத்தை ஒத்ததாக மற்றும் மிருதுவானதாக இருக்கும். கிணற்று நீரில் போட்டு வைத்தால் சப்பென்ற நீரை சுவை நீராகப் பாதுகாக்கும். இதனை புரசு என்றும் அழைப்பர். மற்றும் இம்மரத்தின் பிராண வாயு இவர்களின் தேகத்தைக் குளிர்ச்சிசெய்துசீரான எண்ணலைகளை வளர்க்கும்.

இதன் விதைகளுக்கு குடலிலுள்ள புழுக்களை அகற்றும் தன்மை உண்டு. இதன் விதைகளை குடிநீரிலிட்டு 60 மில்லி காலை, மாலை 3 நாட்கள் எடுக்க குடற்புழுக்களை அகற்றும்.

இதன் இலைகளைவாழை இலைகள் போல் உணவு பரிமாறப் பயன்படுத்தலாம். வாத, பித்த, கபத்தை தன்னிலையில்வைத்திருக்க உதவும்.

**உத்தர நட்சத்திரம் (அலரிமரம்)**

இது ஓர் நஞ்சியல் தாவரமாகும். இதன் தாயகம் மெக்சிக்கோ, மத்திய அமெரிக்கா, கொலம்பியா ஆகும். இது நஞ்சுத் தன்மையுடையது. விதையில் தான் அதிகளவு நச்சுத்தன்மையுண்டு. ஆனாலும் இதன் வேர்களை தைலத் யாரிப்பிற்கு பயன்படுத்தி பெரு நோய் எனப்படும் தோல் நோய்களுக்கு பயன்படுத்துகிறார்கள்.

**சித்திரை நட்சத்திரம் (வில்வமரம்)**

வட இந்தியாவை தாயகமாகக் கொண்ட இம்மரத்தின் பட்டை, இலை, மரம், பழம், விதை, பூக்கள் அனைத்தும் மருத்துவப் பண்புகள் நிறைந்தவை. 12 வகை வில்வ மர இனங்கள் உண்டு.

இதன் பழங்களில் ஈரப்பதன், புரதம், கொழுப்பு, தாதுப்பொருட்கள், நார்ச்சத்து, காபோவைதரேற்று மற்றும் கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, கரோட்டீன், தயமின், உயிர்ச்சத்து C ஆகியன உண்டு. இம்மரத்தின் பிராணவாயுவை பிராணாயாமம் போன்ற முறைகளால் பெற்றீர்களேயானால் உடல் குளுமை அடைந்து உடல் உஷ்ணத்தை தணிக்கக்கூடியதாகவும் இருக்கும்.

குடற்புண், நீரிழிவுக்கு இதன் இலைகளை பயன்படுத்தலாம்.

இதன் வேர்களை குடிநீரிலிட்டு30-60மில்லிஅளவு காலை, மாலை குடித்துவர உடல் பலம் பெறும்.

இதன் பூக்களிலிருந்து தயாரிக்கப்படும் வில்வப்புத் தீனிரை தேநீராகப் பயன்படுத்தினால் உஷ்ணத்தால் ஏற்படும் சகல நோய்களும் கட்டுப்படுத்தப்படும்.

விருட்ச மரங்கள் நட்சத்திர மரங்களாக அமையும் போது நட்சத்திரங்களின் குணங்களோடு ஒப்பிட்டு பரிகாரமாகவும் வாழ்நாள் முழுவதும் பலன் பெறும் வகையிலும் நமக்கு இயற்கையின் மூலம் பெறக் கூடிய எளிய பரிகார முறையாகவும் அமைந்து விடுகின்றது.

(தொடரும்)

## சிறிதரன் எம்.பி.ஜெனிவா பயணம்




(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஜெனிவா நோக்கி நேற்று முன்தினம் பயணமானார்.

இந்த மனித உரிமை கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான பொறுப்புக் கூறல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஜெனிவாவிற்கு பயணமாகியுள்ளார். (இ-7)

## நாட்டில் கடும் மழை; 200 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம்!

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இது வரை 200 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக பலத்த காற்று காரணமாக அநுராதபுரம் மாவட்டத்தில் மாத்திரம் 80 வீடுகள் சேதமடைந்துள்ளதோடு, அவற்றில் 6 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் நிலவிய கடும் வெப்பநிலையைத் தொடர்ந்து, கடந்த இரண்டு தினங்களாக கடும் மழை பெய்து வருகின்றது. குறிப்பாக தலைநகர் கொழும்பு, இரத்தினபுரி, களுத்துறை போன்ற மாவட்டங்கள் அதிக மழை வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளன.

தலைநகர் கொழும்பில் நேற்று முன்தினம் 114 மில்லி லீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் இன்றும் 100 மில்லி லீற்றருக்கும் அதிகமான மழை பெய்யலாமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. காற்றின் வேகமும் அதிகரித்துக் காணப்படும் என்றும் இடிமின்னல் தாக்கம் ஏற்படுமென்றும் அறிவித்துள்ளது.

இதேவேளை, வவுனியா, பொலநறுவை ஆகிய பிரதேசங்களில் அதிகளவான வெப்பநிலை பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய கும்பல் கைது



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டிபாளையம் கிராமத்தில் கடந்த சனிக்கிழமை இரவு வீட்டை உடைத்து கொள்ளையிட்ட கும்பலை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கைது செய்துள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் 4 பேர் கொள்ளைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் எனவும், ஏனைய 4 பேரும் கொள்ளையர்கள் விற்ற பொருட்களை வாங்கியவர்கள் எனவும் தெரிவந்துள்ளது.

கொள்ளையர்களிடமிருந்து 31 பவுண் நிறையுடைய தங்க நகைகளும், சுமார் இரண்டு இலட்சம் ரூபா பணமும், இரண்டு டிஜிற்றல் கமராக்கள், கைத்தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டதுள்ளதுடன் கொள்ளைக்குப் பயன்படுத்திய கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## நியோமல் ரங்கஜீவ பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் 27 சிறைக்கைதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஞானசாரர் மீண்டும் வைத்தியசாலைக்கு

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் வைத்திய பரிசோதனை ஒன்றிற்காக சிறைச்சாலை வைத்தியசாலையிலிருந்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையினைத் தொடர்ந்து சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட ஞானசார தேரர் மீண்டும் ஒவ்வாமை காரணமாக கடந்த 6 ஆம் திகதி ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

நீதிமன்றத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியமை தொடர்பில் ஞானசார தேரருக்கு 6 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் யாழ்.மாநகர முதல்வரை கௌரவிக்கும் நிகழ்வும் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. சமாசத் தலைவர் ஆ.உதயசங்கர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனால்ட், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், சி.சுகிர்தன் மற்றும் கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ.மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை மூலம் சிகை ஒப்பனையாளர் சங்கத்திற்கான ஆறு விதிகள் அடங்கிய புதிய நியதிச் சட்டம்உருவாக்கப்பட வேண்டும் என்ற முக்கிய தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது. இதன் போது சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு தொடர்ச்சியாக உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குகின்ற யாழ்ப்பாண மாநகர மேயர் இ.ஆனால்ட் சிகை ஒப்பனையாளர் சங்கங்களால் கௌரவிக்கப்பட்டார்.

(படங்கள்:- கிஷோர்)

# பாரதம்

## விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்தில் விபரீதம்

# சிலையை கரைக்கச் சென்ற 18 பேர் நீரில் மூழ்கிப் பலி



(சென்னை)

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்துக்கென சிலைகளை நீர்நிலைகளில் கரைக்க முற்படும்போது, ஒரே நாளில் 18 பேர் நீரில் மூழ்கிப் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதும் விநாயகர் சதுர்த்தி பெருவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்த விழாவை முன்னிட்டு உருவாக்கப்பட்ட பலவிதமான சிலைகள் கடல், ஏரி, ஆறுகள் என நீர்நிலைகளில் கரைப்பது பாரம்பரிய வழக்கமாக பின்பற்றப்பட்டு வருகிறது.

இவ்வாறு சிலைகளை நீர்நிலைகளில் கரைக்கும் போது பக்தர்களும் சிலைகளுடன் நீரில் இறங்குவதால் சில நேரங்களில் அவர்களும் மூழ்கி உயிரிழக்கும் அபாயம் ஏற்படுகிறது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பல்வேறு நகரங்கள் மற்றும் சில கிராமப் பகுதிகளில் விநாயகர் சிலைகளை கரைக்கும் விழாவில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ராய்காட், ஜல்னா, புனே உள்ளிட்ட 9 பகுதிகளில் இருந்து 18 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது போன்ற அசம்பாவிதங்கள் ஏற்படாதவாறு கடவுளின் விழாக்களை கொண்டாடுமாறு பக்தர்களுக்கு வலியுறுத்தப்பட்டு வருகிறது. (7)

# சிறையில் உள்ள கருணாஸ் பிணைகோரி மனுத் தாக்கல்



(சென்னை)

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் சட்டமன்ற உறுப்பினர் கருணாஸ், பிணை கோரி மனுத்தாக்கல் செய்துள்ளார்.

சென்னை எழும்பூர் நீதிமன்றில் நேற்று முன்தினம் கருணாஸின் சட்டத்தரணி ராஜா இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் இடம்பெற்ற ஆர்பாட்டத்தின்போது, சர்ச்சைக்குரிய விதத்தில் தீவிரவாதத்தை ஊக்குவிப்பதை போன்று பேசினார் என்ற குற்றச்சாட்டில், கைது செய்யப்பட்டுள்ள கருணாஸ், வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# நிர்மலாதேவிக்கு எதிராக 104 சாட்சியாளர்கள்

## சி.பி.சி.ஐ.டி. அறிக்கையில் தகவல்

(சென்னை)

மாணவர்களை தவறாக வழிநடத்திய குற்றச்சாட்டில், சிறையில் உள்ள நிர்மலா தேவி வழக்கில் 104 பேர் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த வழக்கை விசாரணை செய்து வரும் சி.பி.சி.ஐ.டி, நேற்று முன்தினம் நீதிமன்றல் விசாரணை நகலை தாக்கல் செய்துள்ளது.

குறித்த நகலில் மேற்படி விடயம், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்தோடு இந்த சம்பவம் தொடர்பாக பென் கமரா மற்றும் ஹார்ட்டிஸ்க், பென்ரைவ் உள்ளிட்ட 157 சாட்சியப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப பட்டுள்ளது.

மேலும் உதவிப் பேராசிரியர் முருகன், கருப்புசாமி ஆகியோருக்காகவே நிர்மலா தேவி செயற்பட்டார் என்றும், அவர்களுக்காகவே மாணவிகளை தவறாக வழிநடத்த முயன்றார் என்றும் குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது. (7)

# என் நண்பர் மோடிக்கு எனது அன்பைத் தெரிவியுங்கள்

## சுஷ்மாவிடம் கூறிய ட்ரம்ப்

(நியூயோர்க்)

ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தின் போது வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் எனது நண்பர் மோடிக்கு என் அன்பினை தெரிவியுங்கள் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறினார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் மாதம் ஐ.நா. சபையின் பொதுக்கூட்டம் நடைபெறுவது வழக்கம். இரண்டு வாரம் நடைபெறும் இந்த பொதுக்கூட்டத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்று நடப்பு ஆண்டில் உள்ள முக்கிய விவகாரங்கள் குறித்து பொது விவாதம் நடத்துவார்கள்.

இந்த ஆண்டிற்கான ஐ.நா. பொதுச்சபையின் 73ஆவது கூட்டம் நேற்று தொடங்கி ஒக்டோபர் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நியூயோர்க் நகருக்கு சென்றுள்ளார். இந்த நிலையில், உலக போதைப்பொருள் விவகாரத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான உலகளாவிய கூட்டம் ஒன்று டொனால்ட் ட்ரம்ப் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்ட முடிவில் ஐ.நா வுக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹாலே சுவராஜை கட்டியணைத்து அன்பை வெளிப்படுத்தினார். அதன்பின் ட்ரம்பிடம் சுஷ்மாவை அறிமுகப்படுத்தினார்.

அதன்பின் சுவராஜ், பிரதமர் நரேந்திர மோடியிடம் இருந்து அன்பினை பெற்று வந்துள்ளேன் என ட்ரம்பிடம் கூறினார். இதற்கு டிரம்ப், நான் இந்தியாவை நேசிக்கிறேன். எனது நண்பர் பிரதமர் மோடிக்கு என் அன்பினை தெரிவியுங்கள் என சுஷ்மா சுவராஜிடம் கூறினார். (7)

# 400 ஆண்டு மூழ்கிய கப்ப





(கஸ்காயிஸ்)

போர்த்துக்கல் நாட்டில் 400 ஆண்டுகளுக்கு முன்பு மூழ்கிய கப்பல் லிஸ்பனின் புறநகரான கஸ்காயிஸ் கடற்கரை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த 400 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து நறுமணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு போர்த்துக்கல் நாட்டுக்குச் சென்ற கப்பல் லிஸ்பன் அருகே கடலில் மூழ்கியது.

அதைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆழ்கடல் நீச்சல் வீரர்கள் ஈடுபட்டனர். இந்த நிலையில் அந்த கப்பல் இருக்கும் இடம் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த கப்பலின் உடைந்த பாகத்தில் 40 அடி ஆழத்தில் நறுமண பொருட்கள், 9 பித்தளை பீரங்கிகள், போரத்துக்கேயர்கள் பயன்படுத்தும் ஆடை அலங்கார கருவிகள், சீன செராமிக்ஸ் பொருட்கள், அடிமைகளை விலைக்கு வாங்க பயன்படுத்தும் ரூபாய் நோட்டுகள் போன்றவை இருந்தன.

இவை கடந்த 3ஆம்திகதி லிஸ்பனின் புறநகரான கஸ்காயிஸ் கடற்கரை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. கி.பி.1575, 1625-க்கு இடையே போர்த்துக்கல் நாட்டுக்கும், இந்தியா

# பூமியைப் போன்று 2 உலகங்கள் கண்டுபிடிப்பு

## நாசா தகவல்

(வோஷிங்டன்)

நாசாவின் கெப்லர் எக்சோப்லாநெட் என்ற விண்வெளி ஆய்வுக்கலன் மூலம் பூமியைப் போன்ற இரண்டு உலகங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

கெப்லர் எக்சோப்லாநெட் என்ற விண்வெளி தொலைநோக்கி விண்ணில் ஏவப்பட்டு, பூமியை போல் வேற்றுக்கிரகங்கள் ஏதேனும் இருக்கிறதா? என்பதைக் கண்டறிய பல புகைப்படங்களை எடுத்து அனுப்பியது. அவற்றில் சூரியனைப் போன்ற நட்சத்திரங்களை 'சிக்னஸ்' நட்சத்திர கூட்டத்திற்கு அருகே இருக்கிறது என்று தெரிய வந்துள்ளது.

கெப்லர் தொலைநோக்கி கண்டுபிடித்துள்ள நட்சத்திரங்கள் பலவும் பூமியிலிருந்து நூறு முதல் ஆயிரக் கணக்கான ஒளி ஆண்டுகள் தொலைவில் இருப்பவை என்பதால் இதுவரை மனிதர்கள் செல்லாத எல்லை வரை இந்த விண்வெளி தொலை நோக்கி படம்எடுத்து அனுப்பியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பூமியைப் போன்ற கிரகங்களை அண்டசராசரத்தில் கண்டுபிடிப்பது என்பது சர்வ சாதாரணம் என்றாலும் வானியல் வல்லுநர்கள் இந்தக் கிரகங்களில் வேற்றுக்கிரகவாசிகள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும் கூறியுள்ளனர்.

பூமியிலிருந்து 60 ஒளியாண்டுகள் தொலைவில் கிட்டத்தட்ட பூமியின்



பருமனிலும், இருமடங்கு பருமனுள்ள கோள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நாசாவால் அனுப்பப்பட்டுள்ள டிரான்ஸ் டிங் எக்சோப்லாநெட் செயற்கைக்கோள் மூலமாகவே இந்தக் கோள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், 49 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள ரெட்டார்ஃப் நட்சத்திரத்திற்கு அருகில் இரண்டாவது வேற்றுலகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிரகம் பூமிக்கு ஒப்பிடக் கூடியது. ஆனால் சற்று பெரியது என்றும், அதன் நட்சத்திரத்தைச் சுற்றி மிகக் குறைவான சுற்றுப்பாதைக் காலமே உள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (7)



# வெளிநாடு

# ...நடுகளுக்கு முன் ...ப்பல் கண்டுபிடிப்பு



...வுக்கும் இடையே நறுமண பொருட்கள் வர்த்தகம் உச்சகட்டத்தில் இருந்தது. அப்போதுதான் இந்த கப்பல் மூழ்கியிருக்க வேண்டும் என நிபுணர் கள் கணித்துள்ளனர். (7)

# இம்ரான்கானை தகுதி நீக்கம் செய்யக்கோரிய மனுவை

## தள்ளுபடி செய்த பாகிஸ்தான் உச்சநீதிமன்றம்



(இஸ்லாமாபாத்)

இம்ரான் கான் மீதான தகுதிநீக்க மனுவை பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானின் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியின் தலைவரும், தற்போதைய பிரதமருமான இம்ரான்கானை தகுதி நீக்கம் செய்யுமாறு கடந்த ஆண்டு மே மாதம் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அப்போது அவர் எம்.பியாக இருந்தார்.

அந்த மனுவில் எம்.பி. மனுத்தாக்கலின் போது அவர் தனது பிள்ளையின் பெயரை குறிப்பிடவில்லை. இதனால் அவர் அரசின் விதி முறைகளுக்கு உண்மையாக இல்லை என குற்றம்சாட்டப்பட்டு இருந்தது.

அந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் நீதிபதி இஜாசுன் அஹ்சான் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த மனு காலாவதியாகி விட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது கடந்த பாராளுமன்ற காலகட்டத்தில் போடப்பட்டது எனக்கூறிய நீதிபதி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார். (7)

## ரஃபேல் போர் விமான ஒப்பந்தம்

# ராகுலின் பொய்ப்பிரசாரத்தை நான் முறியடிப்பேன்

## பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் உறுதி



(டில்லி)

ரஃபேல் போர் விமான விவகாரத்தில் நாடு முழுவதும் சுற்றி வந்து காங்கிரஸின் பொய்ப்பிரசாரத்தை முறியடிப்பேன் என, பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் நிர்மலா சீதாராமன் மேற்படி கூறியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

ரஃபேல் போர் விமான விவகாரத்தில், காங்கிரஸ் எழுப்பும் கேள்விகளுக்கு பொறுமையாக பதில் அளித்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், காங்கிரசின் அடிப்படையற்ற, பொய்ப் பிரசாரம் தொடர்ந்து வருகிறது. இதை எதிர்கொள்வதை தவிர, வேறு வழி இல்லை.

அந்த பிரசாரத்தை முறியடிப்போம். நாடு முழுவதும் சுற்றி வந்து உண்மையை சொல்வோம்.

காங்கிரஸ் கட்சியில் விரக்தி நிலவுகிறது. ஒவ்வொரு பிரச்சினையிலும் அரசு எவ்வித களங்கமும் இல்லாமல் இருப்பதை ஒரு பொருட்டாகவே கருதாமல், பொய்க் குற்றச்சாட்டை சுமத்தி வருகிறது.

இந்த விவகாரத்தில், சர்வ்தேச பரிமாணத்தையும் நாங்கள் பார்க்கிறோம். கடந்த ஓகஸ்ட் 30 ஆம் திகதி காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, 'இன்னும் 2 வாரங்களில், ரஃபேல் விவகாரத்தில் பெரிய குண்டு வெடிக்கும் என்று 'டுவிட்டர்' பக்கத்தில் தெரிவித்தார்.

அதேபோல், பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி, சர்ச்சைக்குரிய கருத்தை கூறியுள்ளார்.

இது, தற்செயலாக நடந்ததாக கருத முடியாது. காங்கிரஸ் கட்சி எப்படி இதை முன்கூட்டியே கணித்தது? முன்பு ஒருமுறை, காங்கிரஸ் தலைவர்கள் பாகிஸ்தானுக்கு சென்று, பிரதமர் மோடிக்கு எதிராக பாகிஸ்தானின் உதவியை கேட்டது, நினைவுக்கு வருகிறது" என நிர்மலா சீதாராமன் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## ரஃபேல் போர் விமான விவகாரம் நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு அஞ்சுவது ஏன்? - ராகுல் காந்தி கேள்வி

(டில்லி) 'ரபேஃல்' போர் விமான விவகாரத்தில் மறைப்பதற்கு எதுவும் இல்லை என்றால், நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிட பயப்படுவது ஏன் என்று ராகுல் காந்தி கேள்வி விடுத்தார். காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி 2 நாள் பயணமாக உத்தரபிரதேசத்தில் உள்ள தனது சொந்த தொகுதியான அமேதிக்கு நேற்று முன்தினம் சென்றார். அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது.

பிரதமர் மோடி, தன்னை காவலாளி என்று சொல்லிக்கொள்கிறார். ஆனால், ஒரு காவலாளியே ஏழை மக்களிடம் கொள்ளையடித்தது துரதிர்ஷ்டவசமானது. ஏழைகளிடம் இருந்து ரூ.20 ஆயிரம் கோடி பணத்தை பறித்து, அனில் அம்பானியின் பொக்கெட்டில் போட்டுள்ளார். பிரதமர் மோடி, பிரான்ஸ் நாட்டுக்கு போகிறார். அங்கு அனில் அம்பானி கம்பனிக்கு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தத்தை அளிக்கிறார். காவலாளி ஏன் அப்படி செய்தார் என்று அறிந்து கொள்ள மக்கள் விரும்புகிறார்கள். பிரதமர் பெரிது பெரிதாக சொற்பொழிவு ஆற்றுகிறார். ஆனால், ரபேஃல் விவகாரம் பற்றி ஒரு வார்த்தை கூட பேச மறுக்கிறார். பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் மோடியை 'திருடன்' என்கிறார். ஆனாலும், மோடி எதுவும் பேசவில்லை. பாராளுமன்றத்தில் நான் கேள்வி எழுப்பியபோது கூட அவர் என் கண்களை பார்ப்பதை தவிர்த்து விட்டார். அவருக்கு பதில் அளிக்க தைரியம் இல்லை.

மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி, 'ரபேஃல்' போர் விமான விவகாரத்தில், மறைப்பதற்கு எதுவும் இல்லை என்று கூறுகிறார். அப்படியானால், பாராளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிட பயப்படுவது ஏன்? இந்த ஆட்சியில் விவசாயிகளும், ஏழைகளும் அழுது கொண்டிருக்கிறார்கள். ஆனால், எல்லா பலன்களையும் அனில் அம்பானி, விஜய் மல்லையா போன்ற 10 பெரும் பணக்காரர்களுக்கு மட்டும் அளிக்கிறார்கள். இவ்வாறு ராகுல் காந்தி தெரிவித்தார். (7)

# இருவாரத்திற்குள் சிரியாவுக்கு நவீன எஸ்.300 ரக ஏவுகணைகளை வழங்க ரஷ்யா தீர்மானம்

## இஸ்ரேல் எதிர்ப்பு



(மொஸ்கோ)

உயர்தொழில்நுட்ப வான் பாதுகாப்பு ஏவுகணைகளான எஸ்.300 ரக ஏவுகணைகள் இரண்டு வாரத்திற்குள் சிரியாவுக்கு வழங்கப்படும் என ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்கி சோய்கு தெரிவித்துள்ளார்.

சிரியாவில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போரில் அரசுப் படைகளுக்கு ரஷ்யா ஆதரவு அளித்து வருகிறது. கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள பகுதிகளில் அவ்வப்போது விமானத் தாக்குதலும் நடத்தி வருகிறது. இதேபோல் இஸ்ரேல் அரசு ஏவுகணைகள் மூலம் சிரியா மீது தாக்குதல் நடத்தி வருகிறது. அந்த ஏவுகணைகளை சிரியா அரசுப் படைகள் இடைமறித்து சுட்டு வீழ்த்துகின்றன.

இந்தப் பதற்றமான சூழ்நிலையில், சிரியாவின் லடாக்கியா மாகாணத்தில் கடந்த 17ஆம் திகதி ரஷ்யாவுக்கு சொந்தமான போர் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில், விமானத்தில் பயணம் செய்த 15 ரஷ்ய இராணுவ வீரர்கள் பலியாகினர். இதைத்தொடர்ந்து, தங்கள் நாட்டின் விமானம் இஸ்ரேல் இராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என ரஷ்யா முதலில் குற்றம் சாட்டியது.

எனினும், இந்த விபத்துக்கு இஸ்ரேல் தான் பொறுப்பேற்க வேண்டும் என சிரியா மற்றும் ரஷ்யா வலியுறுத்தியது. ஆனால் இதற்கு இஸ்ரேல், மறுப்பு தெரிவித்து விட்டது.

இதற்கிடையே, சுமார் 300.கி.மீ. தொலைவு வரை பாய்ந்து சென்று எதிரி ஏவுகணைகளை வழிமறித்து அழிக்கும் திறன் கொண்ட உயர்தொழில்நுட்ப எஸ்.300 ரக ஏவுகணைகள் இரண்டு வாரத்திற்குள் சிரியாவுக்கு வழங்கப்படும் என ரஷ்யப் பாதுகாப்புத்துறை அமைச்சர் செர்கி சோய்கு தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, கடந்த 2016 ஆம் ஆண்டு இவ்வகை ஏவுகணைகளை சிரியாவுக்கு வழங்க ரஷ்யா முயன்றபோது, இந்த ஏவுகணைகளை எங்கள் நாட்டிற்கு எதிராக சிரியா பயன்படுத்தக்கூடும் என இஸ்ரேல் கோரிக்கை தெரிவித்ததால் அந்த முடிவை ரஷ்யா கைவிட்டதை நினைவு கூர வேண்டும்.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை நேற்று முன்தினம் தொடர்பு கொண்டு பேசிய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், சிரியாவிற்கு எஸ். 300 ஏவுகணைகளை வழங்க முடிவு செய்துள்ளோம். சிரியாவில் உள்ள ரஷ்ய இராணுவ வீரர்களின் உயிர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனக் கூறினார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள இஸ்ரேல் பிரதமர் அலுவலகம், ரஷ்யாவின் இந்த முடிவு இஸ்ரேல் பிரதமருக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்ய போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு பொறுப்பேற்க வேண்டியது சிரியா இராணுவம் தான். ஆனால், இவ்விவகாரத்தில் எங்கள் மீது ரஷ்யா குற்றம் சாட்டுகிறது.

உயர்தொழில்நுட்ப ஏவுகணைகள் பொறுப்பற்றவர்களின் கைகளில் கிடைத்தால், அதை அவர்கள் தவறாக பயன்படுத்தக்கூடும். எனவே, ரஷ்யாவின் முடிவால் இந்த பிராந்தியம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என குறிப்பிட்டுள்ளது. (7)

# இந்தியா யுத்த இலக்குகளை இலகுவாக அடைகிறது!

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)


எந்தவித கேள்விமனுக் கோரலும் இல்லாமல், திருகோணமலைத் துறைமுகத்தின் எண்ணெய்த் தாங்கிகள் இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு (ஐ.ஓ.சி) வழங்கப்பட்டுள்ளனவெனக் குற்றஞ்சாட்டியுள்ள விமல் வீரவன்ச எம்.பி, "இந்தியா தனது யுத்த இலக்குகளை, இலகுவாக அடைந்துகொள்கிறது" எனவும் தெரிவித்தார்.

திருகோணமலைத்துறைமுகத்தின் முக்கியத்துவம் என்ற தலைப்பில், தேசிய சுதந்திர முன்னணியால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையொன்றிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் மிக முக்கிய அம்சங்களாக, அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தல விமான நிலையம் என்பன காணப்படுகின்றன எனவும், அண்மையில் முத்துராஜவெல பகுதியில் இடம்பெற்ற எண்ணெய்க் குழாய் வெடிப்பாலும், அளவுக்கு அதிகமான கனிய எண்ணெயைக் களஞ்சியப்படுத்த முடியாது என்ற காரணத்தாலும், திருகோணமலையில் 99 எண்ணெய்த்தாங்கிகளுடன் அமைந்துள்ள கட்டமைப்பின் முக்கியத்துவமும் உணரப்பட்டுள்ளது.

ஒரு துளி எண்ணெய் கூட உற்பத்தி செய்யப்படாத இலங்கை போன்ற நாடுகளுக்கு, களஞ்சிய வசதிகளே மிகவும் அவசியம் எனத் தெரிவித்த அவர், யுத்த, பொருளாதார ரீதியில், திருகோணமலைத் துறைமுகம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததென்பது, அதைக் கையகப்படுத்திக் கொள்ள இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகளிலிருந்தே தெரியவருகிறது என்றும் தெரிவித்தார்.

"இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலும், இந்தியா வைத்தவிர வேறு எந்த நாட்டுக்கும், திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இலங்கை வழங்கக் கூடாதென வலியுறுத்தப்பட்டுள்ளது. குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து, திருகோணமலைத் துறைமுகத்தின் எண்ணெய்த் தாங்கிகளை கையகப்படுத்தும் முயற்சிகளை இந்தியா மேற்கொண்டிருந்தாலும், 2003 ஆம் ஆண்டில் 850 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள எண்ணெய்த் தாங்கிகளுடன் கூடிய நிலப்பரப்பு, இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமாகவே கையளிக்கப்பட்டது.



"எவ்வாறாயினும், தற்போது மேற்படி எண்ணெய்த் தாங்கிகள், இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு, கேள்விமனுக் கோரப்படாமலேயே வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் குறுகிய செயற்பாடுகளால், இந்தியா தனது யுத்த ரீதியான இலக்கை இலகுவாக அடைந்துகொண்டுள்ளது. அதனால் நாட்டில், வலுச் சக்தி வளங்களைப் பாதுகாப்பதில் நெருக்கடி ஏற்படும்" எனவும் தெரிவித்தார். (இ-7)

# புதிய இடங்களில் பணிக்குச் செல்லாத வைத்தியர்களுக்கு சம்பளம் இல்லை

## சுகாதார அமைச்சு அதிரடித் தீர்மானம்



(கொழும்பு)

இடமாற்றம் வழங்கப்பட்டு புதிய இடங்களில் பணிக்கு செல்லாத வைத்தியர்கள் மற்றும் தாதிமார்களுக்குரிய சம்பளத்தை இடைநிறுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

போசாக்கு, சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரட்ன, சுகாதாரச் செயலாளர் பீ.ஜீ.எஸ். குணதிலகவிற்கு இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

அவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள வைத்தியர்கள் மற்றும் தாதிமார்களை அவர்களுடைய பழைய பணி இடத்திலிருந்து விடுவிக்காத வைத்தியசாலை பணிப்பாளர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படுகின்ற நிதியுதவிகளை இடைநிறுத்தவும், வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கு பதவி உயர்வு,நிர்வாகத் திறமைகளுக்கு புள்ளி வழங்கும் போது இதுதொடர்பில் அவதானம் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சரின் தலைமையில் நாரஹேன்பிட்டி தேசிய இரத்த பரிமாற்ற மையத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சர் இந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார். (இ-7)

# தெளிவான திட்டமேதுமின்றி கனவு காண்கிறார் ரணில்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், தெளிவான திட்டமேதும் இல்லை எனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவர் வெறுமனே கனவு கண்டுகொண்டிருக்கிறார் எனவும் விமர்சித்தார்.

போயா தின நிகழ்வுகள், தங்காலையிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பின்னர், ஊடகங்களுக்குகருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்துச் செல்லுதல், பொருளாதாரத்தைப் பாதிக்கிறது எனக் குறிப்பிட்டதோடு, கார்களின் விலை அதிகரிப்பதோடு, பருப்பு, சீனி போன்ற உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யவும், அதிக செலவாகிறது எனக் குறிப்பிட்டார்.

அதேபோல், சீனி, இரண்டு களஞ்சியசாலைகளில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்ற போதிலும், அவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அதேபோன்று, பொலிஸ் திணைக்களத்துக்குச் சொந்தமான ஸ்னைப்பர்கள் காணாமற்போயுள்ளன என்றால், அது பாரதூரமான விடயமெனத் தெரிவித்த அவர், அவ்வாறு காணாமற்போன ஸ்னைப்பர்கள், எங்கு பயன்படுத்தப்படுகின்றன என்ற கேள்வி எழுகிறது எனத் தெரிவித்தார்.



ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் கொல்லப்பட வேண்டுமென்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது தொடர்பாகச் செய்தி வெளியாகியிருந்த நிலையில், அதைச் சுட்டிக்காட்டிய அவர், அது தொடர்பான சந்தேக நபர்களுக்கெதிராக, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் விமர்சித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## சுருக்கமாக சொல்லத் தெரியாதவர்கள்

சிலரிடம் சில கேள்விகளை ஒரு சம்பிரதாயத்திற்குக் கேட்டு வைத்தால் உடனே ஏண்டா கேட்டோம் என்று ஆக்கிவிடுகிறார்கள்.

ஒருவுரைப் பார்த்து " என்ன சேர் செளபாக்கியமா?'' என்று கேட்டால் ''ஐயோ அதை ஏன் சேர் கேட்கிறீர்கள் ?'' என்று ஆரம்பித்து அரை மணி நேரம் வாய் மூடாமல் பேசுகிறார்கள்.

அனுமனைச் சொல்லின் செல்வன் என்பார்கள். சீதையை என்று ஆரம்பித்து பேசினால் "ஏன்ன ஆயிற்று சீதைக்கு?'' என்று அதற்குள் ராமன் பதறிவிடுவானாம். அதற்காக "கண்டேன் சீதையை " என்றானாம் அனுமன் .

"டிக்கெட் கிடைச்சுதா" என்று ? கேட்டால் "அதாவது வந்து நான் டிக்கெட் வாங்கப் போனேனா? அங்க பார்த்தா கியூவுல ஏகப்பட்ட கவ்ட்டம்" என்று பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் ஓரோண் ஒண்ணு, ரெண்டோன் ரெண்டு என்று வாய்ப்பாடு மாதிரி ஆரம்பிக்கிறார்கள். சிலர் பளிச் என்று விடயத்திற்கு வரமாட்டேன் என்கிறார்கள் .

இது வேகமான உலகம். மற்றவர்கள் வளவளவென்று பேசுவதை எவரும் விரும்புவதில்லை. ஆனால் தாங்கள் தாம் நிறையப் பேச வேண்டும், மற்றவர்கள் அல்ல என்று நிற்றக்கிறார்கள். பலர் பிடித்தால் செமர்த்தியான பிடி தான்.

மற்றவர்களின் அவசரம், பதற்றம், அத்தியாவசியம் ஆகியவற்றைக் கண்களை உற்று நோக்கிக் கவனித்து விட்டு அவற்றிற்கு ஏற்பச் சுருக்கமாகப் பேசுவது நல்லது.

சொன்னதையே திரும்பச் சொல்வது துணைக் கதைகளையும் கிளைக் கதைகளையும் சொல்லியபடி விலகி விலகிப் போவது, கேட்காத கேள்விகளுக்கெல்லாம் வம்பளப்பது, பளிச்சென்று சொல்ல வேண்டிய பதிலை கதாகாலட்சேபம் போல் நீட்டி முழுக்குவது, சாங்கோபாங்கமாக ஆதி முதல் அந்தம் வரை விளக்குவது ஆகியவை தேவையற்றவை. எதிராளி ஒரு சில துணைக் கேள்விகளாவது இடையில் கேட்கிறார்களா என்று கவனிக்க வேண்டியது மிக அவசியம் .அப்படிக் கேள்விகள் ஏதும் இல்லாவிட்டால் நம் பேச்சு அநாவசியமான ஒன்று தான்.

வெளிநாட்டுக்குத் தொலைபேசியில் பேசுவது போலவும் அதற்கான பில்லுக்கு நாமே பணம் கட்டுவது போலவும் அதே நேரம் அந்தப் பில் தொகையைக் கட்ட முடியாத அளவுக்கு நம்மிடம் மிகக் குறைவாகப் பணம் இருப்பது போலவும் மற்றவர்களுடன் பேசினால் போதுமானது.அதற்கு மேல் அவர்கள் விளக்கம் கேட்டால் பார்த்துக் கொள்ளலாம்.

லேனா தமிழ்வாணன்

# ஈழத்தமிழர் விவகாரத்தில் தி.மு.கவின் பங்கு

இந்த நிலையில், வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட கருணாநிதி, பெப்ரவரி 3 இல் செயற்குழுவைக் கூட்டி, தி.மு.க. சார்பில் "இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை'' எனும் புதிய அமைப்பை உருவாக்கினார்.

"இலங்கைப் பிரச்சினைக்காகப் போராடுவதாகக் கூறி, என் ஆட்சியைக் கவிழ்க்க சதி... இந்தப் பேரவை நடத்தும் நிகழ்ச்சிகளில் யாருடைய மனதையும் புண்படுத்தாத முழக்கங்கள் இருக்க வேண்டும்" என்று அவர் கூறியது, முக்கியத்துவம் பெற்றது.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் பெப்ரவரி 4ஆம் திகதி போர் நிறுத்தம் கோரி முழு அடைப்பு நடத்தப்பட்டது. 17 ஆம் திகதி சென்னை முதல் குமரி வரை மனிதச் சங்கிலி நடத்தப்பட்டது. மக்களின் உணர்வுக்கொதிநிலை தொடர்ந்த நிலையில், தி.மு.க. கட்சி சார்பில், பெப்ரவரி 21 இல் இளைஞர் சங்கிலி, ஸ்டாலின் தலைமையில் ஏப்ரல் 9 இல் சென்னையில் பேரணி நடத்தப்பட்டது. ஏப்ரல் 24இல் வேலை நிறுத்தத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

தொடர்ச்சியான போராட்டங்கள் கொதிநிலையைத் தீவிரப்படுத்த, 2009 ஏப்ரல் 28 அன்று காலையில் மெரினா கடற்கரையில் கருணாநிதி திடீரெனச் சாகும்வரை உண்ணாவிரதம் உட்கார்ந்தார். 6 மணி நேரத்துக்குள், போர்நிறுத்தம் செய்யப்பட்டுவிட்டதாக உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அளித்த தகவலின் பேரில், உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார். ஆனால் அன்றுமட்டும் பல நூறு பேர் கொல்லப்பட்டனர் என ஐ.நா. செயற்கைக்கோளை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகின.

இதை உறுதிப்படுத்தும் விதமாக, "போர் நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை எட்டி விட்டன. கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவது மட்டுமே நிறுத் தப்பட்டுள்ளது"என இலங்கை இராணுவம் சார்பில் விளக்கமளிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் கடற்கரையில் திரண்டிருந்த ஈழத்தமிழர்களில் சில நாட்களில் பத்தாயிரக்கணக்கில் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். தேர்தல் முடிவுகள் வெளியானவுடன், அமைச்சரவைப் பங்கீடு தொடர்பாகப் பேச டில்லி சென்றார், கருணாநிதி. உடன்பாடு எட்டப்படாமல் போக, வெளியிலிருந்து ஆதரவு என அறிவித்தார். பின்னர், ஒரே நாளில், அமைச்சரவையில் பங்கேற்க ஒப்புதலையும் பட்டியலையும் அனுப்பி னார்.

போர் முடிந்தபோதும் உயிர், உடல் துடிக்க முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்ட ஈழத் தமிழர்கள், சித்திரவதை செய்யப்பட்டனர். அந்தச் சூழலில் திடீரென உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்தப்படும் என அறிவித்தார் கருணாநிதி. இனமா, மொழியா எனத் தமிழ் உணர்வாளர்களுக்குள்ளே விவாதம் உண்டானது. அந்தச் சூட்டிலேயே, தி.மு.க. கூட்டணி எம்.பிக்கள் முள்வேலி முகாம்களைப் பார்க்க அனுப்பி வைக்கப்பட்டனர். தமிழரைக் கொன்றொழித்த மகிந்த ராஜபக்ஷவுக்குப் பொன்னாடை போர்த்தியது கடுமையான எதிர்ப்பைத் தோற்றுவித்தது.

2010 பெப்ரவரியில் ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாடு என 2009 செப்டெம்பரில் கருணாநிதி அறிவித்தார். தமிழ் அறிஞர்கள் தரப்பில் எதிர்ப்பு உண்டாக, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2010 ஜூன் 24 ஆம் திகதிக்கு மாநாடு தள்ளிவைக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஆட்சி மாறியதும் காட்சியும் மாறியது. 2ஜி விவகாரத்தில் ஆ.ராசா கைது, தயாளு அம்மாள், கனிமொழி மீது விசாரணை போன்ற பல நிகழ்வுகளும் நடந்தேறிய நிலையில், அதைப் பற்றி விவாதிக்க ஏப்ரல் 27 அன்று தி.மு.கவின் உயர்மட்டச் செயற்றிட்டக் குழு கூட்டப்பட்டது. அதில், போர்க்குற்ற விசாரணை பற்றி முதல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநில ஆட்சியை இழந்துவிட்டதால் ஆட்சிக்குரிய கடப்பாடு தி.மு.கவுக்கு இல்லாமல் போனது. அதேசமயம், மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்தநிலையில், மத்திய அரசுக்கு இலங்கையின் பொருட்டு தி.மு.க. தரப்பில் அழுத்தம் எதுவும் இல்லை.

"இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பாகப் பன்னாட்டு விசாரணை நடத்தவேண்டும்' என ஐ.நா. நிபுணர் குழு தெரிவித்தது. 2012 மார்ச்சில், இறுதிப்போர் மனித உரிமை மீறல்கள் பற்றி இலங்கை அரசே சுய விசாரணை நடத்தலாம் என மார்ச் 23இல் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்தது.

(நாளை தொடரும்)

ஜூனியர் விகடன்

## டெசோ முதல் டெசோ வரை!



ஏப்ரல் 25 அன்று வடசென்னையில் நடந்த கூட்டத்தில், "இதுவரை நிறைவேறாத கனவு, தனி ஈழம். அதற்கான உரத்தை, பலத்தை, எழுச்சியை உருவாக்கிவிட்டுத்தான், உலகத்தை விட்டு விடைபெற விரும்புகிறேன்'' என்றார்.

ஏப்ரல் 30 அன்று நடந்த புது டெசோ கூட்டத்தில், "இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு தனித் தமிழ் ஈழத்தைத் தவிர வேறு வழி இல்லை. விரைவில் தமிழீழம் அமைய, இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் ஐ.நா. மன்றம் மூலம் பொதுவாக்கெடுப்பு நடத்தவேண்டும்" எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருவாரூரில் நடந்த தன் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில், ஈழத் தமிழர்களின் மீட்சிக்காகவே டெசோ மாநாடு நடத்தப்படுகிறது.



# கொலைச்சதிக் குற்றச்சாட்டு ‘நாலகவைக் கைது செய்க’

## கூட்டு எதிரணி மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த நாலக டி சில்வாவையும் ஊழலுக்கெதிரான இயக்கத்தின் முக்கிய உறுப்பினரான நாமல் குமாரவையும் கைதுசெய்யுமாறு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் கொல்வதற்குத் திட்டமிடப்பட்டது எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகவே, இவர்கள் கைதுசெய்யப்பட வேண்டுமென, அக்கட்சி கோரியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்த, பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஜி.எல். பீரிஸ், கொலை செய்வதற்காக இடம்பெற்றதெனக் கூறப்படும் இச்சம்பவத்தை மூடி மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனக் குற்றம்சாட்டினார்.

“ஆரம்பத்தில், நாலக டி சில்வாவைக் கைதுசெய்வதற்குப் பதிலாக, பொலிஸ் தகவல் தொடர்புப் பிரிவுக்கு அவர் மாற்றப்பட்டார். பின்னர், அழுத்தங்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து, கட்டாய விடுமுறையில் அவர் அனுப்பப்பட்டார். இது வேறு யாராக இருப்பின், அதிகாரிகள் அவரை விசாரித்து, கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருப்பர்” என, பீரிஸ் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பான தகவல்களை வெளியிட்ட நாமல் குமார, இவ்விடயத்தில் இணைந்து செயற்பட்டார் என்று கூறப்படும் நிலையில், அவரும் கைதுசெய்யப்பட வேண்டுமென, பீரிஸ் கோரிக்கை விடுத்தார்.

நாமல் பெரேராவுக்கு ஏதாவது நடப்பின், இந்த முழு விடயமுமே முடங்கிப் போய்விடுமெனத் தெரிவித்த ஜி.எல்.பீரிஸ், இவ்விடயத்தில், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவுக்கு ஆதாய காணப்படுகிறது எனவும், எனவே விசாரணைகள் முடிவடையும் வரை, அவர் பதவிவிலக வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாயவின் உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுகிறது எனவும், எனவே, அவரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டுமெனவும், பீரிஸ் மேலும் கோரிக்கை விடுத்தார். (இ-7)

# வாகன விபத்தில் சிக்கிய தாயும் இரு மகள்களும் பலி

(பொத்துவில்)

பொத்துவில், குஞ்சான் ஓடைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும், இரு பெண் பிள்ளைகளும் உயிரிழந்துள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு அக்கரைப்பற்று - பொத்துவில் பிரதான வீதியில் இவர்கள் பயணம் செய்த ஆட்டோவில் எரிபொருள் தீர்ந்துள்ளது.

இந்நிலையில் மற்றுமொரு ஆட்டோவில் செல்வதற்காக வீதியில் நின்று கொண்டிருந்த வேளையில் காரொன்று கட்டுப்பாட்டையிழந்து, இவர்களை மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் ஏ.சி.எப். அஸ்மியா (வயது 34), அவரது 6 வயது மற்றும் 12 வயது இரு பெண்பிள்ளைகளும் உயிரிழந்துள்ளனர்.

மற்றுமொரு ஆண் பிள்ளை (வயது 11) படுகாயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கொலை அச்சுறுத்தலுக்கு ஒருபோதும் அஞ்சவில்லை

## கோத்தபாய கூறுகிறார்



(கொழும்பு)

கொலை அச்சுறுத்தல்களுக்கு தான் ஒருபோதும் அஞ்சவில்லை என்றும் தனக்கு யாரும் பாதுகாப்பு வழங்கத் தேவையில்லை என்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ஆகியோரை கொலைசெய்யச் சதித்திட்டம் தீட்டப்பட்டதாக வெளியான தகவல்கள் நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில், ஹங்வெல்லயில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் கேள்வியெழுப்பினர். அதற்கு பதில்ளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொலை அச்சுறுத்தல் தொடர்பில் அச்சமடையவில்லையென குறிப்பிட்ட கோத்தபாய, யுத்த காலத்தில் விடுதலை புலிகள் தன்னை கொலை செய்வதற்கு முயற்சித்ததாகவும் எனினும் அதிலிருந்தே தப்பிவிட்டதாகவும் தெரிவித்தார். ஆகையால் ஆயுட்காலம் அதிகமாக இருப்பதாக உணர்வதாகவும், இதனால் பாதுகாப்பை அதிகரிக்குமாறு எந்தவித கோரிக்கைகளையும் விடுக்கவில்லை என்றும் கோத்தபாய மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தனக்கு மக்களிடமிருந்து கிடைக்கும் பாதுகாப்பே போதுமானதாக உள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 6 விதி எண் 8


சுக்கிரன் சனி ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கண்டிப்பும், கடமை உணர்ச்சியும் மிக்கவர்கள். சுமாரான உயரமும், சிவந்த கண்களும் உடையவர்கள். கடுமையாக முயன்று வெற்றி பெறுவது ஒன்றையே வாழ்க்கையில் குறிக்கோளாகக் கொண்டு கொள்கைப்பிடிப்புடன் செயற்படுவார்கள். போக விடயத்தில் நாட்ட முடையவர்கள். தீங்கு என்று தெரிந்த எந்தக் காரியத்திலும் மேற்கொண்டு ஈடுபட மாட்டார்கள்.

கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள், தங்கள் கடின உழைப்பினால் முன்னேற முடியும் என்று கூறுவார்கள். மறைத்துப் பேசத் தெரியாத இவர்கள் எதையும் பலபேர் முன்பு பகிரங்கமாகப் பேசுவார்கள். இளமையில் போராடி வயது ஏற ஏற வாழ்க்கையில் சிறந்த வெற்றிகளைக் குவிக்கும் திறமைசாலிகள். சுறுசுறுப்பானவர்கள். இலட்சியவாதிகள். கணிதம், வாகனம், கருவிகள், ஆய்வுகள், அரசியல், உளவியல், உலோகங்கள் போன்ற துறைகளில் சிறப்பாகப் பணியாற்றுவார்கள். உயர்ந்த பதவிகள் கிடைக்கும். புகழுக்காக சுய செலவுகள் செய்வார்கள். ஓவியம், நாட்டியம், சங்கீதம், படமெடுத்தல், உருக்காலை, கணனி போன்ற துறைகளில் பிரபலமுண்டாகும். சுகபோகத்தில் கவனமாக ஈடுபட வேண்டும்.

காம இச்சை அதிகமாக இருக்கும். கட்டுக்கோப்பான வாழ்க்கை வாழ வேண்டும். எதிரிகளைச் சமயம் பார்த்து வீழ்த்தி விடுவர். அழகான பொருட்களை வாங்கிக் குவிப்பார்கள். தன் உடல், முக அழகைப் பராமரிப்பார்கள். சங்கீதம், இலக்கியங்களில் ஆர்வமிருக்கும். எதிலும் ஆடம்பரச் செலவு செய்பவர்கள். லீலைகள் புரிவதில் மன்னர்கள். பால் உணர்சிகள் அதிகம் உடையவர்கள். மதியின் நுட்பத்தால் வெற்றி பெறுவதே இவர்களுக்குப் பிடிக்கும். இவர்கள் கால்பதிக்கும் துறைகளில் ஏதாவது சாதனைகள் செய்து கொண்டேயிருப்பார்கள். மிகுந்த தைரியசாலிகள். கலைகளில் நாட்டமுடையவர்கள். இவர்கள் ஒரு முடிவு எடுத்து விட்டால் யாராலும் மாற்றவே முடியாது.

இவர்கள் பிடிவாதமே இவர்களுக்கு வெற்றியாக முடியும். கோபம் வந்து விட்டால் எவரிடமும் போராடத் தயங்க மாட்டார்கள். போராடுவது இவர்கள் பிறவிக்குணமாகும். நண்பர்கள் பலபேர் இருப்பார்கள். மற்றவர்களின் தந்திர செயல்களை ஆராயும் சக்தி படைத்தவர்கள். ஆண்,பெண் இருபாலாரிடத்தும் நட்பு இருக்கும். இராஜதந்திரம் அறிந்தவர்கள். நாட்டையே ஆளும் சக்தி படைத்தவர்கள்.

காரிய வெற்றிக்கு கடவுளின் பெயரையும் மந்திரங்களையும் உச்சாடனம் செய்வார்கள். கலைநயத்துடன் கூடிய தொழிலில் வெற்றி பெறுவார்கள். உடல் வனப்பு மிகுந்தவர்கள். வயதான போதும் அழகு குறையாதவர்கள். அடிக்கடி வெளியூர், வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொள்வார்கள். வாக்குப் பலமிக்கவர்கள். நுண்ணறிவு படைத்த வாழ்க்கைத்துணையால் வெற்றியான வாழ்க்கை வாழ்வார்கள். பிறருக்காக ஒரு காரியத்தில் இறங்கும் போது துணிச்சலாகவே செயற்பட்டு வெற்றி காண்பார்கள்.




எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் எண்ணம் உடையவர்கள். விவாதிக்கும் திறன் இருக்கும். பண விடத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்வார்கள். தோல்வியைக் கண்டு பயப்பட மாட்டார்கள். நேர்மை, புத்திசாலித்தனம் இருக்கும். உதவிகள் கேட்டு வருபவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து புகழ் அடைவார்கள். அஞ்சா நெஞ்சமுடையவர்கள். குழந்தைகளிடம் தனிப்பாசம் இருக்கும். அனைவரிடமும் ஒத்துப் போவார்கள். எதிலும் முதன்மை பெறுவார்கள். மற்றவர்களை மகிழ்விக்கும் தொழில் செய்வார்கள். பதவியை துஷ்பிரயோகம் செய்வார்கள். காந்தக் கண்கள் உடையவர்கள். நோயைப் போக்கும் வைத்தியம் அறிந்தவர்கள். ஜோதிடம், வைத்தியம், மந்திரம், மனோதத்துவம் அறிந்த நபர்கள். நிர்வாகத்திறன் இருக்கும். குற்றம் செய்த மனிதர்களைக் கடுமையாகக் கண்டிப்பார்கள். குருபக்தி அதிகமிருக்கும். பல திட்டங்களைப் போடுவார்கள். விஞ்ஞான அறிவு மிக்கவர்கள். கடவுள் பக்தி மிக்கவர்கள். பசுமையையும் மலர்களையும் இரசிப்பார்கள். நல்வாழ்க்கைத் துணையை அடைவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

1, 10, 19, 28, 6, 15, 24, 5, 14, 23.

**துரதிர்ஷ்ட திகதிகள்**

8, 17, 26, 3, 12, 21, 30

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், மஞ்சள், பொன்னிறம்,பச்சை.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**

கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள், ஒரேஞ், ரோஸ்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**

மரகதம், பெரில், அக்கோமரின், டக்குவார்ஸ், ஜேட், நீலக்கல்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

53

கலாநிதி மு.குணசிங்கம்

வட ஆபிரிக்காவில் மொரோக்கோ நாட்டில் பிறந்த இந்த முஸ்லிம் அறிஞர் பதினான்காம் நூற்றாண்டில் மேற்காசிய நாடுகளுக்கும் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கும் மேற்கொண்ட தனது பயணங்களைப் பற்றி விரிவான தகவல்களை எழுதி வைத்ததனால் மிகவும் பிரபல்யம் பெற்ற ஒரு பயணியாகக் கருதப்படுகின்றார்.

இபன்பதூதா இந்தியாவிலிருந்து மாலைதீவுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து இலங்கைக்கு சென்றபோது தன்னை மன்னனுடைய மாளிகைக்குச் சிலர் அழைத்துச் சென்றதாகவும் அம்மன்னன் தன்னை நன்கு உபசரித்து முத்துக்கள் போன்ற பரிசில்களை வழங்கியதாகவும் அவர் எழுதிவைத்த ரேஹ்லா என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் எழுதிய குறிப்புகள் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுவதற்குக் காரணம் அவரை உபசரித்த மன்னன் யாழ்ப்பாணத்தில் ஆட்சிநடத்திய ஆரியச்சக்கரவர்த்திகளில் ஒருவனாக இருந்தமையேயாகும்.

மேலும் இபன்பதூதா, இலங்கையில் தான் சந்தித்த மன்னரின் பெயர் ஆரியச்சக்கரவர்த்தி என்பதை ஐயத்துக்கு இடமின்றிக் கூறியுள்ளார். மேலும் ஆரியச் சக்கரவர்த்தி குறிப்பிடத்தக்க செல்வமுடையவனாகக் காணப்பட்டான் என்றும், அவன் பயன்படுத்திய ஒரு சிறுகிண்ணம் மாணிக்கக் கல்லினால் இழைக்கப்பட்டதாக இருந்தது என்றும் அத்துடன் அவனிடம் பெருமளவு முத்துக்கள் இருந்தன என்றும் அவர் தனது குறிப்புகளில் கூறியுள்ளார்.

வடமேற்குக் கரையில் முத்துக் குளிப்பு நடத்தப்பட்ட இடங்கள் (மன்னார் கடல்) ஆரியச்சக்கரவர்த்தியின் ஆட்சிக்குள் இருந்தது என்றும் அத்துடன் மேற்குக் கரைத் துறைகள் (புத்தளம், சிலாபம்) இவனுடைய ஆதிக்கத்தக்கு உட்பட்டிருந்தன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் வடமேற்குத் துறைகள் வழியாக நடைபெற்ற வர்த்தகம், சிறப்பாக முத்து மற்றும் சங்கு ஆகிய பொருட்கள் தொடர்பாக நடைபெற்ற பன்னாட்டு வர்த்தகம், ஆரியச்சக்கரவர்த்தியின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த்து என்றும், அவனுடைய செல்வம் இவ்வர்த்தகத்தின் வழியாக வந்தது என்றும் அறியலாம்.

இபன்பதூதா சிவனொளிபாத மலைக்கு யாத்திரை செய்ய விருப்பம் தெரிவித்த போது, அப்பயணத்திற்கு வேண்டிய பாதுகாப்பையும் பணியாட்களையும் கொடுத்துதவியதுடன், அவரைப் பல்லக்கில் தூக்கிச் செல்வதற்கும் ஆரியச்சக்கரவர்த்தி ஏற்பாடுகளைச் செய்தான்.

இபன்பதூதாவின் பரிவாரம்



மன்னார் வளைகுடா

“ஆரியச்சக்கரவர்த்திகளுடைய கல் வெட்டுகளோடு, செப்பேடுகளோ யாழ்ப்பாணத்தில், அல்லது வேறெந்தத் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்தும் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் ஓர் ஆரியச்சக்கரவர்த்தியின் கட்டளையின்படி பொறிக்கப்பட்ட தெளிவான தமிழ்க் கல்வெட்டுஒன்று, தெற்கே கேகாலை மாவட்டத்தில் உள்ள கொட்டகம என்ற இடத்தில் கிடைத்துள்ளது. தற்பொழுது கொழும்பு அரும் பொருளகத்தில் பேணப்பட்டு வைக்கப்பட்டுள்ள இக் கல்வெட்டு வாசகம் ஒரு செய்யுள் வடிவில் உள்ளது”

## யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி. 1200-கி.பி. 1500)

யாழ்ப்பாணத்திலிருந்து மேற்குக் கரையோரமாக மன்னாரைக் கடந்து, சிலாபத்துறை ஊடாக சிவனொளிபாதமலைக்குச் சென்று திரும்பியது என்பதனையும் இபன்பதூதாவின் குறிப்புகளில் காண முடிகிறது.

இலங்கையின் வடபாகங்களிலும், வடமேற்குப் பிரதேசங்களிலும் பதினான்காம் நூற்றாண்டில், வலிமையுடைய அரசனாக ஆரியச் சக்கரவர்த்தி ஆட்சி நடத்தினான் என்பதை இச் சான்றுகள் காட்டி நிற்கின்றன.

ஆரியச்சக்கரவர்த்தியின் வலுவுக்கு, அவன் தமிழ்நாட்டுடன் கொண்டிருந்த நல்லுறவும் ஒரு காரணம் என்பது இபன்பதூதா தரும் தகவல் மூலம் வெளிப்படுகின்றது. இக் காலகட்டத்தில் பழைய பேரரசுகள் வீழ்ச்சியடைந்து முஸ்லிம் ஆட்சி பரவியது.

மதுரையிலிருந்த முஸ்லிம் ஆட்சியாளர் ஆரியச்சக்கரவர்த்தியுடன் நண்பர்களாக இருந்தனர் எனக் கூறப்படுவதால், தமிழ்நாட்டுடன் நட்பாக இருந்தது என்பதும், அத்தகைய உறவு யாழ்ப்பாண இராச்சியத்தின் செல்வாக்கு வளர உதவியிருக்கும் என்பதும் புலனாகின்றது.

இபன்பதூதா தரும் தகவலை உறுதிப்படுத்தும் வகையில் சிங்கள நூல்களும், கல்வெட்டுச் சான்றும் காணப்படுகின்றன. இதனால் பதினான்காம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் ஆண்ட அரசு ஒரு வலிமை வாய்ந்த இராச்சியமாக எழுச்சி பெற்றிருந்தது என்பதனைக் காணமுடிகிறது.

ஆரியச்சக்கரவர்த்திகளுடைய கல்வெட்டுகளோடு, செப்பேடுகளோ யாழ்ப்பாணத்தில், அல்லது வேறெந்தத் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்தும் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் ஓர் ஆரியச்சக்கரவர்த்தியின் கட்டளையின்படி பொறிக்கப்பட்ட தெளிவான தமிழ்க் கல்வெட்டு ஒன்று, தெற்கே கேகாலை மாவட்டத்தில் உள்ள கொட்டகம என்ற இடத்தில் கிடைத்துள்ளது.

தற்பொழுது கொழும்பு அரும் பொருளகத்தில் பேணப்பட்டு வைக்கப்பட்டுள்ள இக் கல்வெட்டு வாசகம் ஒரு செய்யுள் வடிவில் உள்ளது.

**சேது:**

**“கங்கணம் வேற் கண்ணினையாற் காட்டினார்**
**பங்கையக்கை மேற்திலகம் பாரித்தார் - பொங்காலிநீர்ச் சிங்கை நகராரியரைச் சேராவனுசேர்**
**தங்கள் மடமாதர் தாம்”**

மேலும் இச் சாசனத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளுடைய இலச்சினைச் சொல்லாகிய சேது இடம்பெற்றிருப்பதானது ஆரியச்சக்கர வர்த்தியின் ஆணையால் இது பொறிக்கப்பட்டது என்பதைக் காட்டுவதுடன், மேலும் அம்மன்னனின் ஆணையுடன் பொறிக்கப்பட்ட கல்வெட்டு தெற்கிலங்கையிலும் இருந்தது என்பதனையும் புலப்படுத்துகின்றது.

இதைவிட ஆரியச்சக்கரவர்த்தி சிங்கைநகர் மன்னன் என்பதும், அவன் சிங்கள மன்னனைத் தெற்கில் நடைபெற்ற போரில் தோற்கடித்தபின் இக்கல்வெட்டை வெற்றிப் பிரகடனமாகப் பொறித்துச் சென்றான் என்றும் அறியமுடிகிறது.

யாழ்ப்பாணத்து ஆரியச் க்கரவர்த்தி ஒருவன் தெற்குக்குத் தன் படைகளுடன் சென்று சிங்கள மன்னன் ஒருவனுடன் போர் தொடுத்து ,வெற்றிபெற்று மீண்டான் என்பதற்கு இதைவிட வேறு நம்பகமான சான்றைக் காட்ட முடியாது.

இந்த ஆரியச்சக்கரவர்த்தியின் பெயர் கல்வெட்டிலே குறிப்பிடப்படாமையால், இவன் யார் என்பதை உறுதிப்படுத்த முடியாமல் இருக்கிறது. இவன் மட்டுமல்லாமல் வேறு யாழ்ப்பாண மன்னர்களும் தெற்கில் போர் நடத்தியிருக்கலாம்.

தெற்கில் மதவெல என்னுமிடத்தில் கிடைத்த சிங்களக் கல்வெட்டு ஒன்றில் தென்னிலங்கையில் பதினான்காம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த சிங்கள மன்னனாகிய மூன்றாம் விக்கிரமபாகு, மார்த்தாண்டப் பெருமாள் என்ற பெயருடைய ஒருவனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டான் என்ற செய்தி வருகின்றது.

மன்னன் ஒருவன் செய்த உடன்படிக்கை என்பதால் அது இன்னொரு மன்னனுடன் அல்லது தலைவனுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை எனக் கொள்ளலாம்.

அப்படியெனின், மார்த்தாண்டப் பெருமாள் என்பவன் ஓர் ஆரியச் சக்கரவர்த்தியாக இருந்திருக்கலாம். ஏனெனில் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுவது இவ்விடத்தில் கவனிக்கத்தக்கது.

மேற்குறிப்பிட்ட கல்வெட்டுக்களை விட சிங்கள வரலாற்று நூல்கள், குறிப்பாக, ராஜாவலிய, கோகில -சந்தேஸய, நிக்காயஸங்க்லஹய ஆகியன யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகளைப் பற்றியும், அவர்கள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராகப் படையெடுத்தமை பற்றியும் கூறுகின்றன.

(தொடரும்)

# யாழ். தமிழ்ச்சங்கத்தின் விவாதச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய சிவராமலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான விவாதச் சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள பாரதி விழாவின்போது வழங்கப்படவுள்ளது எனத் தமிழ்ச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் உபஅதிபர் தமிழறிஞர் அமரர் க. சிவராமலிங்கம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் இவ் வெற்றிக்கிண்ணத்தை வழங்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாண்டு முதன்முறையாக முன்னெடுக்கப்பட்ட விவாதச் சுற்றுப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி விவாத அணி கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் 43 ஆயிரம் சிறுவர் தொழிலாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில், 43 ஆயிரத்து 714 சிறுவர் தொழிலாளர்கள் உள்ளனர் எனச் சுட்டிக்காட்டியுள்ள இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் மாலணி லொக்குபோதாகம, சப்ரகமுவ மாகாணத்தில் மட்டும், 2,179 பேர் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறுவர் தொழிலாளர்கள் குறித்த தகவல்களைத் தாம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும், சிறுவர் தொழிலாளர்களற்ற மாகாணமாக சப்ரகமுவ மாகாண சபையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். (இ-7)

# உலக நதிகள் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நானாட்டானில் நிகழ்வு

(மன்னார்)

உலக நதிகள் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் ஏற்பாட்டில் நானாட்டான் அருவி ஆற்றங்கரையில் நதிகளை சுத்தப்படுத்தி பாதுகாப்பது தொடர்பான நிகழ்வு மன்னார் மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் குமாரதேவன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் போது ஆற்றுப்பகுதியை சுத்தப்படுத்தும் நிகழ்வை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆரம்பித்து வைத்தார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக அமைச்சர் றிசாத் பதியுதீனின் செயலாளர் றிப்கான் பதியுதீன் மற்றும் மன்னார் மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் குமாரதேவன், பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர்கள், மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஆ.சந்தியோகு, விவசாய அமைப்புகள், நீர்ப்பாசன ஊழியர்கள், மாவட்ட விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2)



கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தின் அறுபதாவது ஆண்டை முன்னிட்டு கடந்த 23 ஆம் திகதி நடத்தப்பட்ட மரம் நாட்டுவிழாவின் போது கனடா கிறீன்பீல்ட் உதவிச் செயலாளர் மரம் நாட்டுவதையும் மரக்கன்றுகளை வழங்குவதையும் படங்களில் காணலாம்.



சுன்னாகம் றோட்டறக் கழகத்துடன் யாழ்ப்பாண ICBT Campus இணைந்து நடத்திய இரத்ததான நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி யாழ் ICBT Campus இல் நடைபெற்றது. இதில் ஐம்பதிற்கும் மேற்பட்ட குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1514

## பாண்டியன்

நோயாளி: நீங்க எழுதிக் கொடுத்த மாத்திரை எங்கேயும் கிடைக்கல டாக்டர்



டாக்டர்: வாடா வா... பேனா எழுதுதான்னு கிறுக்கிப் பார்த்த பேப்பரைத் தூக்கிட்டு போனது நீதானா

## கதிர்

மரங்கள் ஓய்வை விரும்பினாலும் அதைக் காற்று விடுவதில்லை



மனிதன் ஓய்வை விரும்பினாலும் இந்த செல்போன் விடுவதில்லை

## ஜீவா

போராடி தோற்றால்... மரணம்கூட வெற்றிதான்



போராடாமல் வென்றால் வெற்றிகூட தோல்விதான்

## இளவரசு

எங்க அம்மா வேற பேரில பேஸ்புக்ல இருக்கிறது தெரியாம... எங்க அம்மா கிட்டயே எங்கப்பா கடலை போட்டிருக்காரு



இப்போ எங்கம்மா கட்டையிலேயே போடுறாங்க... சத்தம் காதைப் பொளக்குது

## அரவிந்த்

30 ஆண்டுகளின் சேமிப்பில் நீ கட்டிய உன் மாளிகையில்



மூன்றுநாட்கள்கூட உன் சடலத்தை வைத்திருக்க மாட்டார்கள்... நினைவில் வையுங்கள்

## கண்ணன்

மரம் நடவேண்டும் என...



.ம்ண்டையில உறைக்கிற மாதிரி சொல்கிறது வெயில்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உலக சுற்றுலா தினம் இன்று தேசிய நிகழ்வு யாழில் ஆரம்பம்

2018 ஆம் ஆண்டுக்கான உலக சுற்றுலா தினத் தேசிய வைபவம் செப்டெம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையான 3 நாட்களும் சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ விவகாரங்கள் அமைச்சு, இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் வடக்கு மாகாண சபை ஆகிய நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் யாழ். மாநகர சபை மைதான வளாகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. 3 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வில் எமது பாரம்பரிய கைப்பணிப் பொருட்களுக்கான கண்காட்சி, பாரம்பரிய மற்றும் உணவுப் பண்டங்களை உள்ளடக்கிய உணவுத் திருவிழா என்பவற்றுடன் விசேடமாக எமது பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்களை வெளிக்கொணரும் விதமான கலை நிகழ்வுகளும் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளன. அத்துடன் 27 ஆம் திகதி காலை யாழ். பல்கலைக்கழகத்தில் சர்வதேச சுற்றுலா தின அங்குரார்ப்பண வைபவத்துடன் சுற்றுலாத்துறைசார் நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் சுற்றுலாத்துறையினது வளர்ச்சி தொடர்பான ஆய்வுக் கருத்தாடலும் நடைபெறவுள்ளது.

எனவே இவ்வுலகச் சுற்றுலா தின தேசிய வைபவத்தினையொட்டி இக்கட்டுரையானது வடக்கு மாகாணச் சுற்றுலாப் பணியகத்தினால் வினா விடை வடிவமாக இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.


1. மாகாண சுற்றுலாத்துறை வளர்ச்சியின் தற்போதைய நடவடிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் யாவை?

வடமாகாணத்தின் சுற்றுலாத் துறையானது அதன் வளர்ச்சியை நோக்கிய ஆரம்பகட்ட அடியை எடுத்து வைத்துள்ளது என்றே கூறலாம். நீண்ட கால யுத்தத்தினால் இம்மாகாணம் பெரிதும் பாதிக்கப்பட்டு முழுமையான சிதைவுக்குள்ளாகி இருந்த நிலையில் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கான சகல வாய்ப்புக்களும் அடைபட்டு இருந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. போருக்குப் பின்னரான உட்கட்டுமான புனரமைப்பு நடவடிக்கைகளினால் வீதிகள் புனரமைப்பு மற்றும் புகையிரத பாதைகள் புனரமைப்புக்களினால் வடமாகாணம் சீரான போக்குவரத்து வசதிகளுடன் இலங்கையின் ஏனைய மாகாணங்களுடனும் தலைநகரத்துடனும் இணைக்கப்பட்ட போது சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கான சூழலும் ஏற்படுத்தப்பட்டு சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கான அத்திபாரம் ஸ்திரமான முறையில் இடப்பட்டது.

முதலாவது வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரின் அமைச்சின் கீழ் ஒரு சிறிய அலகாக மிகக் குறைந்தளவான பௌதீக மற்றும் நிதி ஆளணி வசதிகளுடன் இயங்கி வந்த சுற்றுலாத்துறையானது தற்போது சுற்றுலாப் பணியகத்துக்கான நியதிச்சட்டம் அனுமதிக்கப்பட்டு முதலமைச்சரின் அமைச்சின் கீழ் வடமாகாணத்திற்கான சுற்றுலாப் பணியகம் இவ்வருடம் ஜூன் மாதம் முதல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை வளர்ச்சியின் நிர்வாக கட்டமைப்புக்கான ஏற்பாடுகளில் இச்சுற்றுலாப் பணியகத்தின் ஸ்தாபிதமானது ஒரு மைல்கல் எனக்கூறலாம்.

நீண்டகால யுத்தம் நிறைவுக்கு வந்தபின் தெருப்பாதைகளின் புனரமைப்பும் தொடரூந்து சேவைகளின் மீள் அறிமுகமும் சுற்றுலாப் பயணிகளின் வடபகுதிக்கான வருகையை அதிகரிக்கச் செய்தன. அத்துடன் வடபகுதி மக்களின் சுற்றுலாத்துறை மீதான முதலீடுகளும் அதிகரிக்கப் பட்டமையானது விடுதிகளின் எண்ணிக்கையினையும் தரத்தையும் உயர்வடையச் செய்துள்ளன. புலம்பெயர் தமிழர்கள் தமது உறவினர்களையும் நண்பர்களையும் பார்ப்பதற்காக பெருமளவில் வருகை தரத்தொடங்கியுள்ளனர். நல்லூர் திருவிழாக் காலங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை பெருமளவில் உயர்வடைந்திருப்பதனை காணமுடியும். வடமாகாணத்தில் இருக்கின்ற சமய சம்பந்தமான இடங்கள், வழிபாட்டுத் தலங்கள், வரலாற்றுப் பிரதேசங்கள், தொல்பொருளியல் பிரதேசங்கள், கடற்கரை பிரதேசங்கள், பறவைகள் சரணாலயங்கள், வன விலங்குகள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் ஆகியவற்றைப் பார்வையிடும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டமை சுற்றுலாப் பயணிகளை கவர்ந்துள்ளது. குறிப்பாக இந்தியா, சீனா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் ஏனைய நாடுகளின் சுற்றுலாப் பயணிகளும் வட பகுதிக்கு வரும் எண்ணிக்கை உயர்வடைந்திருப்பதனை காண முடிகின்றது. இதன் திட்டமிட்ட அபிவிருத்திகளுக்கு வடமாகாணத்தின் சுற்றுலாவிற்கான தந்திரோபாய திட்டமிடல் 2017- 2020 காலப்பகுதிக்கென உருவாக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வடமாகாணத்தில் அடங்கும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய 5 மாவட்டங்களுக்கும் சுற்றுலா அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் மீள் உருவாக்கப்பட்டுள்ளன. இன்று உலக சுற்றுலா தினம் 2018 என்ற மிகப் பெரிய நிகழ்வையும் சுற்றுலாப் பணியகம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் முதலமைச்சரின் அமைச்சினால் சுற்றுலாப் பயணிகளுக்கான சுற்றுலா வழிகாட்டி கையேடுகள், சுற்றுலா வழிகாட்டிகளுக்கான கையேடுகள், சுற்றுலா தகவல் வள திரட்டுப் புத்தகங்கள் (Tourism Resource Profiles), சிற்றேடுகள் (Brochures), வரைபடங்கள் (Maps), வடமாகாண சுற்றுலாத்துறைக்கான தந்திரோபாயத் திட்டம் போன்ற பல்வேறு வகையான



வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளதுடன் வடமாகாண சுற்றுலாத் துறைக்கான இணையத்தளம் 'tourism north.lk' எனும் இணைய முகவரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள சிறிய ஒதுக்கீடுகளில் கடற்கரை பிரதேசங்களை அழகுபடுத்தல், இயற்கையான சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல், பறவைகள் சரணாலயங்களில் சுற்றுலா சார் மேம்பாட்டு வசதிகளை மேற்கொள்ளல், அழகுபடுத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

போருக்குப் பின்னரான வடமாகாணத்தின் மீள் கட்டமைப்பு, பொருளாதார அபிவிருத்தி மற்றும் மக்களுக்கான வாழ்வாதார அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கிய அபிவிருத்தியை நோக்கிய பொருளாதார முன்னேற்றத்தில் சுற்றுலாத்துறையும் ஒரு முக்கிய பங்கு ஆற்ற வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும். எனினும் இம்மாகாணத்தின் சமுதாய கட்டமைப்பு மற்றும் கிராமிய பொருளாதார மீளுருவாக்கம் ஆகியவற்றில் சுற்றுலாத்துறை பங்குகொள்ளும் போது எமது சமுதாய கட்டமைப்பு, கலாசாரம், விழுமியங்களில் சீரழிவு மற்றும் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்படாத வண்ணம் மிகவும் அவதானமாக சுற்றுலா சார் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியுள்ளது. எமது மாகாண சுற்றுலாத்துறையின் வளர்ச்சியில் தனியார் பங்களிப்பு மிகவும் அவசியம் என உணரப்பட்டுள்ளது. தனியார் துறையினரின் பங்களிப்புடன் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. எனினும் சுற்றுலாத்துறை சார்ந்த தனியார் துறையினரின் முதலீட்டுத் திட்டங்களுக்கான கோரிக்ல்க்கைளை மிகவும் அவதானமாகவே பரிசீலிக்க வேண்டியுள்ளது.

2. இந்த வருடத்தின் சுற்றுலாத் துறையின் தொனிப்பொருளின் அடிப்படையில் எவ்வாறான மாற்றங்களை ஈடுபடுத்தவுள்ளீர்கள்?

இவ்வருட உலக சுற்றுலா தினத்தின் தொனிப்பொருள் "சுற்றுலாவும் டிஜிற்றல் பரிமாற்றமும்" என்பதாகும். டிஜிற்றல் பரிமாற்றத்தினூடாக சுற்றுலாத்துறைய வளர்க்கும் நடவடிக்கைய முன்னெடுப்பதே இதன் நோக்கமாகும். கணனிப் பயன்பாடும் தகவல் தொழில்நுட்பமும் வேகமாக அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக அவற்றின் நன்மைகளை சுற்றுலாத் துறையிலும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விருப்பமே இத்தொனிப்பொருளின் அறிமுகமாகும். சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்களுக்கான சகல தரவுகளையும் தகவல்களையும் பார்வையிடக் கூடிய சுற்றுலா மையங்கள் தொடர்பான விபரங்கள், அமைவிடங்கள், பயணிக்கும் பாதைகள், சுற்றுலா விடுதிகள் தொடர்பான தகவல்கள், இணைய வழி பதிவுகள் போன்ற முழுமையான வசதிகளை டிஜிற்றல் பரிமாற்றம் மூலம் மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எம்மால் மேற் கொள்ளப்பட்டுள்ளன. வடமாகாணத்திற்கான சுற்றுலா இணையத் தளம் உருவாக்கப்பட்டுள்ளது அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாகும். எதிர்காலத்தில் தனியார் துறையினரின் குறிப்பாக விடுதிகள் முகாமைத்துவ சபை, வடமாகாண தனியார் சுற்றுலா சங்கம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இத் துறையில் முன்னேற்றங்கள் அடைவதற்குதிட்டமிடப்பட்டுள்ளது.

3. எந்தெந்த துறைகளில் சுற்றுலாத்துறையினை வளர்த்து வருகின்றீர்கள்?

வடமாகாண சுற்றுலாத்துறையின் தனித்துவம் மிக்க அம்சங்களாக நீண்ட கடற்கரைகள், அழகிய தீவுகள், பறவைகள் சரணாலயங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க தலங்கள், வரலாற்றுப் பெருமை மிக்க வழிபாட்டுத்தலங்கள், இயங்கைச் சுற்றுலா மையங்கள், கலை, கலாசார பாரம்பரியங்கள், தொல் பொருட்சான்றுகள், தொல்பொருளியல் பகுதிகள் ஆகியன காணப்படுகின்றன. இத்துறைகளில் வளர்ச்சி காண்பதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன. எமது மாகாணத்திற்கு வரும்சுற்றுலாப்பயணிகளில்பெரும்பாலானோர் எமது வணக்கஸ்தலங்கள், கடற்கரை மற்றும் தீவு களை பெருமளவில் நாடிச்செல்வது வெளிப்படையானது. எனவே இத்துறைகளில் வளர்ச்சி காண் பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

4. வடபகுதியின் பொருளாதாரத்தில் எத்தகைய மாற்றங்கள் சுற்றுலாத்துறையால் கொண்டு வரப்பட முடியும்?

வடமாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயம் மற்றும் மீன்பிடி துறைகள் முக்கிய பங்கை வகிப்பதை போலவே சுற்றுலாத்துறையும் பெரும் பங்கு வகிக்கின்றது. அரச மற்றும் தனியார் துறையினரின் கூட்டு முயற்சியுடன் கூடிய (Public Private Partnership) நடவடிக்கைகளினால் அதிகளவு வேலை வாய்ப்புக்களையும் மக்களுக்கான வருமான ஈட்டங்களையும் அதிகரித்து இம் மாகாணத்தின் பொருளாதாரத்தில்மாற்றங்களைகொண்டு வர முடியும். முதலமைச்சரின் அமைச்சின் கீழான சுற்றுலாப் பணியகம் நிறுவப்பட்டதன் பின்னர் தனியார் துறையினரின் பங்களிப்பை ஊக்குவிக்கவும் இணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நகர்வுகள் மேற் கொள்ளப்படுகின்றன. சுற்றுலாப் பணியகத்தின் முகாமைத்துவ சபையானது தனியார் துறையினரின் பிரதிநிதியை உள்ளடக்கியதாகவே அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சுற்றுலாத்துறை சார்ந்த பெருமளவான வேலைவாய்ப்புக்களை பெரிதும் உருவாக்க முடியும். இதற்கு வசதியாகவே வரவேற்பறை முகாமைத்துவ பயிற்சிகள் சுற்றுலாப் பணியகத்தினால் நடத்தப்படுகின்றது. அத்தகைய பயிற்சியாளர்களுக்கு தொழிற்பயிற்சியும் வழங்கப்படுவதனால் பயிற்சி பெறும் காலத்திலேயே வேலை பெறக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படுகின்றது. அத்துடன் சுற்றுலாப் பயணிகளுக்கான உற்பத்திகள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்த முடிவதனால் கைத்தொழில் அபிவிருத்தியும் அதனூடான வருமான மீட்டலும் சாத்தியமாகின்றது. எடுத்துக்காட்டாக கடல் உணவுகள், இயற்கையான பழ வகைகள் என்பன இங்கு வழங்கப்பட முடிவதனால் சூழல் பாதுகாப்புடன் கூடிய சந்தைப்படுத்தலினை மேற்கொள்ளும் சாத்தியம் உருவாக்கப்பட முடியும்.

திருமதி சி. நந்தகுமார்
கணக்காளர்,
முதலமைச்சரின் அமைச்சு,
வடமாகாணம்

# சிறுவர் அரங்கம்

## மன உறுதி

ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் லண்டன் மாநகருக்குச் சென்றிருந்தார். அங்கு அவரது நண்பர் ஒருவரின் பண்ணை வீட்டில் தங்கியிருந்தார்.

அந்தப் பண்ணை வீடு மிகப் பெரிய நிலப்பரப்பில், இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் இருந்தது. அங்குப் நிறைய மாடுகள் வளர்க்கப்பட்டன. ஒரு நாள் மாலை பண்ணை மைதானத்தில் விவேகானந்தர் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அவருடன் நண்பரும் நண்பரின் மனைவியும் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு மாடு அவர்களை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தது. அதன் மூர்க்கத்தனமான ஓட்டத்தைப் பார்த்து பயந்து போன நண்பரின் மனைவி, அப்படியே மயங்கி விழுந்துவிட்டார்.

நண்பர் மனைவியைத் தூக்க முயன்றார். அப்போது மாடு அவர்களை நெருங்கி விட்டது. நண்பருக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.



இன்னும் சில நொடிகள் அங்கே இருந்தால் மாட்டின் கொம்புகளுக்கு இரையாக நேரிடும் என்பதை உணர்ந்த நண்பர், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எழுந்து வேறு திசையில் ஓடினார்.

ஆனால், விவேகானந்தர் அப்படி இப்படி அசையாமல் ஆணி அடித்தது போல் அந்த இடத்திலேயே நின்று விட்டார்.

பாய்ந்து வந்த மாடு கீழே விழுந்து கிடந்த நண்பரின் மனைவியையும் விவேகானந்தரையும் விட்டு விட்டு, ஓடிக் கொண்டிருந்த நண்பரைத் துரத்தியது.

அதிர்ஷ்டவசமாக ஒரு கட்டடத்திற்குள் புகுந்து தப்பினார் நண்பர். அதன்பிறகே பண்ணை ஊழியர்கள் ஓடி வந்து மாட்டைப் பிடித்துக் கட்டிப் போட்டனர்.

விவேகானந்தர் அதன் பிறகே அந்த இடத்தை விட்டு அசைந்தார். அங்கு வந்த நண்பருக்கோ ஒரே வியப்பு.

அப்போது நண்பரின் மனைவியும் மயக்கம் தெளிந்து எழுந்தார். "சிறிது கூட பயமே இல்லாமல் அந்த ஆபத்தான நேரத்திலும் ஒரே இடத்தில் உறுதியாக உங்களால் எப்படி நிற்க முடிந்தது?" என்று கேட்டார் நண்பர்.

அதைக் கேட்டு மெல்லப் புன்னகைத்த விவேகானந்தர், "நான் வித்தியாசமாக எதையும் செய்து விடவில்லை. வருவது வரட்டும் சமாளிப்போம் என்ற ஒருவித மன உறுதியுடன் நின்று விட்டேன். ஓடுபவரைக் கண்டால் துரத்திச் செல்வது மிருகங்களுக்கு உரிய குணம். அதனால் தான் மாடு என்னை விட்டுவிட்டு, ஓடிக் கொண்டிருக்கும் உங்களைத் துரத்தியது" என்று முடித்தார்.

உயிருக்கு ஆபத்தான நேரத்தில் கூட, அதைக் கண்டு பயந்து ஓடாமல், வருவது வரட்டும் என்ற மன உறுதி பெற்றிருந்த சுவாமி விவேகானந்தரைப் பார்த்துப் பெரிதும் வியந்தார் நண்பர்.

# பொது அறிவு துளிகள்

- மிக அதிக முறை நோபல் பரிசு பெற்ற நாடு அமெரிக்கா.
- இரண்டாம் உலகப் போரில் மிக அதிகளவில் உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதம் அடைந்த நாடு ரஷ்யா.
- விலங்குகள், பறவைகள் இடும் முட்டையின் எடையில் 12 சதவீதத்தை அதன் ஓடுகள் கொண்டிருக்கும்.
- மிக அதிக மொழிகளைக் கொண்ட நாடு பப்புவா நியூகினியா.
- தோட்டத்தில் வளரும் மண்புழுக்களின் தலையில் 248 தசைகள் உண்டு.
- மிக நீளமான எல்லையைக் கொண்ட நாடு, சீனா (22, 143 கி.மீ.)
- கருணைக் கொலையை சட்டபூர்வமாக அங்கீகரித்த முதல் நாடு நெதர்லாந்து.
- உலகின் விலை உயர்ந்த நகரம் என்ற பெருமையை டோக்கியோவிடமிருந்து ஹொங்கொங் தட்டிப் பறித்துள்ளது.
- உலகிலேயே, பணக்காரர்களின் நகரம் என்றழைக்கப்படும் ஹொங்கொங்கில் தான் ரோல்ஸ் ராய்ஸ் கார்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது.
- மின்னல் தாக்குவதால் அதிக சேதங்களை அடிக்கடி சந்திக்கும் பகுதி அமெரிக்காவின் ஃபுளோரிடா.
- பாலைவனங்களே இல்லாத கண்டம் ஐரோப்பா.
- துருப்பிடித்த பின் இரும்பின் எடை மேலும் அதிகரிக்கும்.
- உலகிலுள்ள விஞ்ஞானிகளில் 50 சதவீதம் பேர் இராணுவ ஆராய்ச்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# பழமொழிகள்

- பகுத்தறியாமல் துணியாதே , படபடப்பாகச் செய்யாதே.
- பழி ஒரு பக்கம் பாவம் ஒரு பக்கம்.
- புத்திமான் பலவான். பெருமையும் சிறுமையும் வாயால் வரும்.
- பேசாதிருந்தால் பிழையொன்றுமில்லை.
- பொன் ஆபரணத்தைப் பார்க்கிலும் புகழ் ஆபரணமே பெரிது.
- மருந்தும் விருந்தும் மூன்று வேளை.
- மண்ணுயிரை தன்னுயிர்போல் நினை.
- வாழ்வும் தாழ்வும் சில காலம்.
- சைகை அறியாதவன் சற்றும் அறியான்.
- தணிந்த வில்லுத்தான் தைக்கும்.
- தவிட்டுக்கு வந்த கை தங்கத்துக்கும் வரும்.
- நகத்தாலே கிள்ளுகிறதைக் கோடரி கொண்டு வெட்டுகிறான்.

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் 2018.09 26

❖ 1987-தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் லெப்டினன் கேணல் திலீபன் இந்திய அமைதிப் படையிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நீரும் அருந்தா உண்ணாநோன்பு இருந்து உயிர் துறந்தார்.

### பிறப்புகள்

❖ 1820-ஈஸ்வர சந்திர வித்யாசாகர், இந்திய மெய்யியலாளர், ஓவியர் (இ. 1891)
❖ 1849-இவான் பாவ்லோவ், நோபல் பரிசு பெற்ற உருசிய மருத்துவர் (இ. 1936)
❖ 1886-ஆர்ச்சிபால்ட் ஹில், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய மருத்துவர் (இ. 1977)
❖ 1888-தாமஸ் ஸ்டியன்ஸ் எலியட், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயக் கவிஞர், எழுத்தாளர், திறனாய்வாளர் (இ. 1965)
❖ 1890-பாபநாசம்சிவன், கர்நாடக இசை அறிஞர் (இ. 1973)
❖ 1894-ஜே.எல்.பி.ரோச் விக்டோரியா, தமிழக அரசியல்வாதி, தொழிலதிபர் (இ. 1962)
❖ 1908-பெரியசாமி தூரன், கர்நாடக இசை அறிஞர் (இ. 1987)
❖ 1913-திருக்குறள் வீ. முனிசாமி, தமிழறிஞர் (இ. 1994)
❖ 1923-தேவ் ஆனந்த், இந்திய நடிகர், இயக்குநர் (இ. 2011)
❖ 1926-வ.விஜயபாஸ்கரன், தமிழக இதழாசிரியர், எழுத்தாளர் (இ. 2011)
❖ 1932-மன்மோகன் சிங், இந்தியாவின் 13 ஆவது பிரதமர்
❖ 1934-ஏர்னெஸ்ட் மக்கின்டயர், இலங்கை-அவுஸ்திரேலியத் தமிழ் ஆங்கில நாடகாசிரியர்
❖ 1966-பூரி ஜெகன்நாத், இந்தியத் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர்
❖ 1985-அபிசேக் ரகுராம், இந்திய கர்நாடக இசைப் பாடகர்

### இறப்புகள்

❖ 1842-ரிச்சர்டு வெல்லசுலி, பிரித்தானிய அரசியல்வாதி, இந்தியத் தலைமை ஆளுநர் (பி. 1760)
❖ 1915-கீர் ஹார்டி, இசுக்கொட்டிய இடதுசாரி அரசியல்வாதி, தொழிற்சங்கவாதி (பி. 1856)
❖ 1954-தேசிக விநாயகம்பிள்ளை, தமிழகக் கவிஞர் (பி. 1876)
❖ 1959-எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, இலங்கையின் 4 ஆவது பிரதமர் (இ. 1899)
❖ 1966-சே.ப.இராமசுவாமி, இந்திய வழக்கறிஞர், அரசியல்வாதி, ஆளுநர் (பி. 1879)
❖ 1978-மன்னே சீகுபான், நோபல் பரிசு பெற்ற சுவீடிய இயற்பியலாளர் (பி. 1886)
❖ 1987-திலீபன், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் (பி. 1963)

### சிறப்பு நாள்

❖ டொமினியன் நாள் (நியூசிலாந்து)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 90 | 100 |
| தக்காளி | 40 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 150 | 120 | 80 |
| கரட் | 130 | 160 | 200 |
| பூசணி | 50 | 40 | 60 |
| புடோல் | 60 | 50 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 60-100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 140 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 70 | 50 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 100 |
| போஞ்சி | 140 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | — | 80 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 140 | 120 |
| முள்ளங்கி | 50 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 80 |

பிறர் துன்பம் தன் துன்பம்போல் எண்ணினால்... வரலாற்றில் ஒரு தலைவன் உருவாகுவான்.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பார்த்தீபனின் தியாகத்தை பாடப்புத்தகத்தில் ஏற்றுங்கள்

தியாக தீபம் திலீபனின் 31ஆவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும்.

எங்கள் மண்ணில் விளைந்த தியாக தீபம் திலீபனின் தியாகத்தை எவரும் தன்னலமாக் காமல் அனுஷ்டிப்பது உலகம் வாழ் தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.

தமிழ் மக்களின் வாழ்வுக்காக பன்னிரு நாட்கள் நீராகாரம் இன்றி உண்ணாநோன்பிருந்து உயிர்விட்ட அந்தத் தியாகம் மனித மொழிகளால் விதந்துரைக்கப்படக்கூடியதன்று.

இந்திய தேசத்தின் விடுதலைக்காக சத்தியாக்கிரகம் இருந்த மகாத்மா காந்தி அகிம்சைக்கு அடியெடுத்துக் கொடுத்தார் என்றால்,

அகிம்சையின் உச்சத்தைத் தொட்ட உன்னதம் எங்கள் தியாகி திலீபனையே சாரும்.

பாரத பூமியின் தந்தை மகாத்மா காந்தி இறந்தபோது சீன நாட்டு அறிஞன் ஒருவன் கூறினான்; மகாத்மா காந்தி என்று ஒருவர் இந்த உலகில் இருந்திருக்க முடியுமா என்று எதிர்கால மக்கள் சமூகம் கேட்கும் என்று.

இவ்வாறு அந்த சீன அறிஞன் சொல்வதற்குக் காரணம் மகாத்மா காந்தி நாற்பது நாள் மேற்கொண்ட உப்புச்சத்தியாக்கிரகமாகும்.

அதே அறிஞன் உயிரோடு இருந்திருந்தால், எங்கள் பார்த்தீபனின் தியாகத்தை கண்டிருந்தால், திலீபன் என்ற தியாகியைபோல் முன்பும் எவரும் இருக்கவில்லை. இனியும் எவரும் இருக்கப்போவதில்லை என்று நிச்சயம் சாசனம் எழுதி வைத்திருப்பார்.

ஆம், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தியாகி திலீபன் மேற்கொண்ட உண்ணாவிரதத்தின் வரலாறு பாட நூலாக்கப்பட வேண்டும்.

இந்தத் தியாகம் தமிழ் மண்ணில் நடந்தது என்பதற்காக இதனை இந்த நாட்டு ஆட்சியாளர்கள் புறக்கணிப்பார்களாக இருந்தால், அவர்கள் சிங்கள மக்களுக்கும் இந்த நாட்டுக்கும் மிகப்பெரும் தவறை இழைக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

தியாகி திலீபனின் தியாகத்தை இந்த நாட்டின் வருங்கால சந்ததி கற்றறிவது கட்டாயமானது.

இன்று தியாகி திலீபனின் தியாகத்தை தமிழ் மக்கள் போற்றித் துதிப்பதுபோல, என்றோ ஒரு காலத்தில் தியாகி திலீபனின் தியாகத்தை இந்த உலகம் முழுவதும் பெருமையுடன் பேசிக் கொள்ளும்.

அந்தத் தியாகத்தின் உன்னதத்தை வரலாறாக எழுத உலகம் முன்வரும்.

இதுமட்டுமல்ல மகாத்மா காந்தியின் உருவச்சிலையை பிரிட்டன் தன் நாட்டில் நிறுவி காந்தியின் அகிம்சையைக் காட்டி, தன் நாட்டு மக்களுக்கு அகிம்சையின் வலிமையை எடுத்துரைக்க முற்பட்டதோ,

அதுபோல, தியாகி திலீபனின் தியாகத்தை இந்த உலகம் தன் மக்கள் சமூகத்துக்காக அகிம்சை போதனையாக அங்கீகரிக்கும். இது நிச்சயம் நடக்கும்.

ஆகையால் இப்போதே பார்த்தீபனின் தியாகத்தை எம் பாடப் புத்தகத்தில் பதிப்பது அவசியமாகும்.

# வடமராட்சியில் வாடியமைத்து கடலட்டை பிடிக்கும் தென்னிலங்கையை சேர்ந்தவர்களை வெளியேற்றவும்

## கிளிநொச்சி மாவட்ட நீதிபதி கணேசராஜா உத்தரவு

(கிளிநொச்சி)

வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாடி அமைத்து தங்கியுள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த கடலட்டை பிடிப்பவர்களை உடனடியாக வெளியேற்றுமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நேற்று செவ்வாய்க் கிழமை உத்தரவிட்டார்.

வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாடி அமைத்து தங்கியுள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த கடலட்டை பிடிக்கும் எட்டு நிறுவனங்களுக்கு எதிராக மருதங்கேணி பிரதேச செயலகத்தால் கடந்த 21.07.2018 அன்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

இதில் அரச நிலத்தில் தங்கியிருப்பதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில் அவர்களை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் அவர்கள் வெளியேறாத பட்சத்தில் தீர்ப்பின் பிரதியினை பெற்று பொலிஸில் முறையிட்டு வெளியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என மருதங்கேணி பிரதேச செயலாளர் கே. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை வடமராட்சிக் கிழக்கு மீனவர்களுக்கு விடிவு கிடைத்துள்ளதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் தென்னிலங்கை மீனவர்கள் கடலட்டைத் தொழில் மேற்கொள்வதனால் உள்ளூர் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தனர்.

இதனையடுத்து வடமராட்சி கிழக்கு மீனவர்கள் பல போராட்டங்களை நடத்தி பல்வேறு தரப்பினரிடம் இத் தொழிலை தடுத்து நிறுத்தும்படி வேண்டுகோள் விடுத்தனர்.

இவ்வாறாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரனிடம் முறையிட்டதற்கமைவாக கடந்த மூன்றுமாதத்திற்கு முன்னர் பிரதேச செயலரினால் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவ் வழக்கினை விசாரித்த நீதிமன்றம் நேற்று மேற்படி தீர்ப்பை வழங்கியது குறிப்பிடத்தக்கது. (இ-60.64)

# புளொட் உறுப்பினரிடம் மீட்கப்பட்ட ஆயுதங்களை அரச பகுப்பாய்வுக்குட்படுத்த நீதிமன்று அனுமதி

(யாழ்ப்பாணம்)

புளொட்டின் முன்னாள் உறுப்பினரின் வீட்டில் மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான விபரங்களை அறிந்து கொள்வதற்காக அவற்றை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துககு அனுப்பக் கோரும யாழ்ப்பாணப் பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு நீதிவான் அனுமதியளித்தார்.

புளொட்டின் முன்னாள் உறுப்பினர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்தார். அந்த வீட்டில் முன்னர் புளொட்டின் அலுவலகம் இருந்தது.

அந்த வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டில் உள்ளார். அங்கிருந்து வெளியேற புளொட்டின் முன்னாள் உறுப்பினர் மறுப்புத் தெரிவித்து வந்தார்.

வீட்டு உரிமையாளர் தனது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். நீதிமன்றின் கட்டளையின் அடிப்படையில் கடந்த டிசம்பர் 19ஆம் திகதி அந்த வீட்டிலிருந்தவரை வெளியேற்ற யாழ். மாவட்ட நீதிமன்றப் பதிவாளருடன் யாழ்ப்பாணம் பொலிஸார் சென்றனர்.

அங்குள்ள பொருள்களை வெளியேற்றும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர். அப்போது அங்கிருந்த அலுமாரி ஒன்றுக்குள் துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் காணப்பட்டன.

பயன்படுத்தத்தக்க ஏகே 47 துப்பாக்கி ஒன்று, அதற்குப் பயன்படுத்தப்படும் கோல்ட்ஸர் 2, ரவைகள் 396, கைத்துப்பாக்கி ஒன்று, அதற்குப் பயன்படுத்தும் மகஸின்கள் 3, வோக்கிகள் 2 மற்றும் 2 வாள்கள் மீட்கப்பட்டன.

அதனையடுத்து புளொட்டின் முன்னாள் உறுப்பினர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கட்டளையில் நேற்றுவரை தொடர்ச்சியாக சுமார் 9 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் சந்தேகநபர் நேற்று செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது.

"சந்தேகநபரிடம் மீட்கப்பட்ட ஆயுதங்களில் ஏகே 47 துப்பாக்கி ஒன்று, கைத்துப்பாக்கி ஒன்று மற்றும் 2 வோக்கிகள் என 4 பொருள்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும். அவற்றைத் தயாரித்த நாடு எது? உற்பத்தி ஆண்டு எது? உள்ளிட்ட தகவல்களை அறிவதன் ஊடாக, அவை எங்கிருந்து சந்தேகநபருக்குக் கிடைததது என்பதை ஆராய முடியும். எனவே குறித்த நான்கு சான்றுப் பொருள்களையும் அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்ப மன்று அனுமதிக்க வேண்டும்" என்று பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு அனுமதியளித்த மன்று, சந்தேகநபரான புளொட் முன்னாள் உறுப்பினரின் விளக்க மறியலை 14 நாள்களுக்கு நீடித்து உத்தரவிட்டது. (ம-9)

# விபத்தை ஏற்படுத்திய அம்புலன்ஸ் சாரதியின்

## பொறுப்பற்ற செயலால் மக்கள் விசனம்

சுனனாகம் நகரில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயையும்மகனையும்மோதி விட்டு அம்புலன்ஸ் சாரதி, மனிதாபிமானமற்ற நிலையில் அமபுலன்ஸ் வண்டியை எடுத்துச் சென்றார் என்று விபத்து இடம்பெற்ற இடத்தில நின்றவர்கள் தெரிவித்தனர்.

அம்புலன்ஸ் வண்டியில் பயணித்த மருத்துவர், வைத்தியசாலைக்குக் கடமைக்குச் செல்ல வேணடும் என்று தெரிவித்தே சாரதி அம்புலன்ஸ் வண்டியை எடுத்துச் சென்றார் என்று தெரிவிக்கப் பட்டது.

இந்தச் சம்பவம் சுன்னாகம் நகர் கே.கே.எஸ் வீதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றது.

மகனை பாடசாலையில் விடுவதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பப் பெண், உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் அங்கு நின்றவர்களால் முச்சக்கர வண்டியில் ஏற்றி வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சுன்னாகம் மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த நிக்லஸ் மேரி நிரோஜினி (வயது-32) என்ற பெண் உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-9)

## பேசுவதில் கூட...

- பிறர் நம்மைப் புகழவேண்டும் என்கிற எண்ணத்தில் பேசாதீர்கள்
- வார்த்தைகளைக் கையாள்வது என்பது கத்தி மேல் நடப்பது போன்றது. எனவே சிந்தித்துப் பேசுங்கள். பிறர் மனம் புண்ணாகும்படி பேசிவிட்டு வருந்தாதீர்கள். ஒரு பயனுமில்லா கருத்தை இணைத்துப் பேசாதீர்கள்.
- நிதானமாய்ப் பேசுங்கள், அதில் நம்பிக்கை வளரும்படி பேசுங்கள்
- உங்கள் பேச்சு உங்களை வளர்க்கும் சக்தி என்பதை மறவாதீர்கள்
- பயனுள்ள கருத்துக்களையும் பண்பான சொற்களையும் பேசுங்கள்.
- அறிவுபூர்வமான பேச்சுக்களே ஆக்கபூர்வமான செயல்களை வளர்க்கும்.

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### முயற்சி செய்யத் தவறாதீர்!



✦ செல்வத்தால் யாரும் கர்வம் கொள்வது கூடாது. பணக்காரனுக்கும் பணக்காரன் உலகில் இருக்கவே செய்வான்.

✦ பிறருடைய குறைகளைப் பேசி நேரத்தை வீணாக்க வேண்டாம். பயனுள்ள செயல்களில் மட்டும் ஈடுபடுங்கள்.

✦ கடின முயற்சி கொண்டவனுக்கு எல்லாமே சாத்தியம். முயற்சி இல்லாதவனுக்கு எதுவும் கிடைக்காது.

✦ பழங்கள் நிறைந்த மரம் கனத்தினால் தாழ்ந்து வளையும். அது போல நல்லவர்கள் அடக்கம் காரணமாக பணிவுடன் இருப்பார்கள்.

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில் மடுமாதா ஆலயப் பிரதேசம், மடுமாதா ஆலயம், முகந்தாங்குளம் 2ஆவது பண்ணை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)


# தீவக பிரதேச கிரிக்கெட்

# நயினை மத்தி சம்பியன்











மகாமாரி விளையாட்டுக் கழகம் நடத்திய பிரதேச செயலகத்தில் பதியப்பட்ட கழகங்களிடையிலான 10 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டி புளியங்கூடல் மகாமாரி விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட் கிழமை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் அணியை எதிர்த்து நயினாதீவு மத்தி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய நயினை மத்தி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அல்லைப் பிட்டி சென்பிலிஸ் 8.3 ஓவர்களில் 31 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 34 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

இப்போட்டியின் சிறப்பாட்டக் காரராக நயினை மத்தி அணியின் பிரசாத் தெரிவு செய்யப்பட்டதோடு இவரே தொடரின் சிறந்த பந்துவீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து ஆட்டநாயகன் விருது அல்லை சென்பிலிப்ஸ் அணியின் பில்சனும் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக கரம்பன் Hero Star அணியின் குமரனும் தெரிவு செய்யப் பட்டனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - (வரையுள்ளது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளின்படி யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொன்னையா மோகன் ஆகிய நான் 30/06/2018 ஆம் திகதிய 2077/55 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேற்படி சங்கத்தின் துணைவிதி பிரிவு 23 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளிற்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளை பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமை யாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (¼) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக் குழுவிற்கான (9) ஒன்பது உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவ் ஒன்பது உறுப்பினர்களுள் ஆகக் குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
- இரண்டு வேட்பாளர் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும். கிளைக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

| தொ. இல | கிளைகளின் பெயர் | கிளை இல | பொதுச்சபைக்கூட்டம் நடைபெறும் இடம் | காலம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | கொடிகாமம் | 01 | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி | 30.09.2018 மு.ப 10.00 | திரு.நாகமுத்து ஜெயவதனன் |
| 02 | கச்சாய் பாலாவி | 02 | யா/கச்சாய் அ.த.க பாடசாலை | 30.09.2018 மு.ப 10.00 | திரு.திருச்செல்வம் வித்தககலாநிதி |
| 03 | வினோபா | 03 | கச்சாய் கிராம முன்னேற்ற சங்க மண்டபம் | 30.09.2018 மு.ப 10.00 | செல்வி லாவண்யா சத்தியசீலன் |
| 04 | அல்லாரை | 04 | யா/அல்லாரை அ.த.க பாடசாலை | 30.09.2018 மு.ப 10.00 | திரு.கணபதிப்பிள்ளை செந்தூரன் |
| 05 | மந்துவில் மத்தி | 05 | யா/மந்துவில் றோ.க.த.க பாடசாலை | 30.09.2018 மு.ப 10.00 | திரு.கந்தசாமி பிரதீபன் |
| 06 | மந்துவில் | 06 | யா/மந்துவில் சிறீபாரதி வித்தியாலயம் | 30.09.2018 மு.ப 10.00 | திரு.சந்திரலிங்கம் சுவர்ணன் |
| 07 | இயற்றாலை | 07 | யா/இயற்றாலை அ.மி.த.க பாடசாலை | 30.09.2018 மு.ப 10.00 | திரு.ஜெயபாலன் சதீஸ் |
| 08 | வடவரணி | 08 | யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தி. | 30.09.2018 மு.ப 10.00 | திரு.பாக்கியராசா குருபரன் |
| 09 | இடைக்குறிச்சி | 09 | யா/இடைக்குறிச்சி சிறீ சுப்பிரமணிய வித்தி. | 30.09.2018 மு.ப 10.00 | திரு.இராஜசிவம் தனுசன் |
| 10 | நாவற்காடு | 10 | நாவற்காடு கிளை மண்டபம் | 30.09.2018 மு.ப 10.00 | திரு.சற்குணசிங்கம் பிறேமிலன் |
| 11 | நவஜீவனம் | 11 | யா/மிருசுவில் றோ.க.த.க பாடசாலை | 30.09.2018 மு.ப 10.00 | திரு.கணேசராசா பரநிருபன் |
| 12 | வடக்கு மிருசுவில் | 12 | யா/மிருசுவில் அ.த.க பாடசாலை | 30.09.2018 மு.ப 10.00 | திரு.பாலரட்ணம் சிவபாலன் |
| 13 | விடத்தற்பளை | 13 | யா/விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம் | 30.09.2018 மு.ப 10.00 | திரு.இராசரத்தினம் வேல்குமார் |
| 14 | எழுதுமட்டுவாழ் | 14 | யா/எழுதுமட்டுவாழ் சிறீ கணேசா வித்தி. | 30.09.2018 மு.ப 10.00 | திரு.நாகலிங்கம் குமணதாசன் |
| 15 | நாவற்காடு | 15 | யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தி. | 30.09.2018 மு.ப 10.00 | திரு.பரமசிவம் தவப்பிரியன் |
| 16 | கரைம்பைக்குறிச்சி | 16 | யா/வரணி மத்திய கல்லூரி | 30.09.2018 மு.ப 10.00 | திரு.செல்லையா நிமலறூபன் |
| 17 | கெற்பேலி | 17 | வீரபத்திரர் சனசமூக நிலையம் | 30.09.2018 மு.ப 10.00 | திரு.இராசையா உதயகுமார் |
| 18 | தவசிகுளம் | 18 | யா/போக்கட்டி றோ.கத்தோலிக்க த.க பாட. | 30.09.2018 மு.ப 10.00 | திரு.வல்லிபுரம் நிதர்சன் |
| 19 | உசன் | 19 | யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | 30.09.2018 மு.ப 10.00 | திரு.ஜோசப் ஜெகதாஸ் |

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் எவரேனும் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட அறிவித்தல் கிடைக்காது விடினும் இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு தமக்குரிய கிளையின் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க முடியும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
இல.857, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

ஒப்பம்: பொன்னையா மோகன்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
25.09.2018

(C-3953)

## தியாகதீபம் திலீபனின்...

நினைவுத் தூபியைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள கம்பிவேலி, உருவப்படம் மற்றும் அலங்காரங்கள், பந்தலை அகற்றுவதற்கான இடைக்காலக் கட்டளையை வழங்கவும் நீதிமன்று மறுப்புத் தெரிவித்துள்ளது.

யாழ்.மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபியைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள இரும்புக் கம்பி வேலியை அகற்றுவதற்கும் அங்கு தீலிபனின் உருவப்படம் அமைக்கப்பட்டுள்ள அலங்காரப் பந்தலை அப்புறப் படுத்துவதற்கும் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளருக்கு உத்தரவிடுமாறு கோரி, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர்.

குறித்த வழக்கு யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. யாழ்.மாநகர சபை ஆணையாளர் மன்றில் முன்னிலையாகியதுடன் அவர் சார்பில் 5 சட்டத்தரணிகள் முன்னிலையாகினர். வழக்கு தொடுத்த பொலிஸார் முன்னிலையாகியிருந்தனர்.

பொலிஸார் தமது விண்ணப்பத்தை முன்வைத்தனர்.

**நினைவு தூபியை சிங்கள மக்கள் பார்வையிட்டால் இன நல்லிணக்கம் பாதிக்கப்படும்**

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் நல்லூா பகுதியில், தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் முன்னாள் போராளி, இ.பார்த்தீபனின் நினைவு தூபி நிறுவப்பட்டிருந்தது. அது அழிக்கப்பட்ட பின்னர் தற்போது அந்த இடத்தில் புகைப்படம், பந்தல்கள், சிவப்பு மஞ்சள் கொடிகள் என்பன கட்டப்பட்டுள்ளன. அந்த இடத்தை சுற்றி கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை மாநகரசபையின் பொறியியலாளருடைய தலைமையில் கட்டப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் உறுப்பினரை நினைவுபடுத்துவதற்கு அரச பொருட்கள் சேவையாளர்களை பயன்படுத்துவது குற்றம். மேலும் இந்த இடம் யாழ்.மாநகர சபையால் சட்டத்துக்கு முரணாக அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது. அரச பணத்தை அனுமதியில்லாத நினைவு தூபி அமைக்கவென சட்டத்துக்கு முரணான செயற்பாட்டை செய்கிறார்கள்.

எனவே அங்கு கட்டப்பட்டுள்ள வேலிகள் சோடினைகளை அகற்றுமாறு யாழ்.மாநகர ஆணையாளருக்கு மன்று கட்டளை வழங்க வேண்டும்.

இந்த நிகழ்வுகள் தமிழ் மக்கள் மத்தியில் இனவாதத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைகிறது. தேசிய நல்லிணக்கம் மத நல்லிணக்கத்துக்கு பாதிப்பாக உள்ளது.

தென்பகுதியில் இருந்து சுற்றுலா வரும் சிங்கள மக்கள் இந்த நினைவுச்சின்னத்தை பார்வையிடுகிறார்கள். இதன் காரணமாக தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் குழப்பங்கள் ஏற்படும். எனவே பயங்கரவாத நடவடிக்கையை நிறுத்துவதற்கு சட்ட ஏற்பாட்டின் படி மேற்குறித்த கட்டுமானப்பணிகள் அகற்ற மாநகரசபை ஆணையாளருக்கு கட்டளை பிறப்பிக்க வேண்டும் என சமர்ப்பணம் செய்தனர்.

அதனை தொடர்ந்து மாநகரசபை ஆணையாளர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் குறித்த வழக்கு தொடர்பாக சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

**தியாகி திலீபன் தடைசெய்யப்பட்ட இயக்க உறுப்பினர் அல்ல**

தியாகி திலீபனின் நினைவுத் தூபி அமைக்க நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. அந்த தூபியை அமைக்கும் அமுலாக்க முகவராகவே யாழ்ப்பாண மாநகர சபை உள்ளது. எனவே திலீபனின் நினைவுத் தூபி விவகாரத்தில் யாழ்ப்பாண மாநகர சபையை நீதிமன்றுக்கு இழுக்க முடியாது.

இந்த தூபி அமைப்பதற்கான ஒப்பந்தம் நல்லூர் பிரதேச செயலகம் மற்றும் யாழ் மாநகர சபை ஆணையாளருக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அத்துடன் மாநகர சபை தீர்மானத்தில் இது அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொது தொல்லை (இடையூறு) ஒன்று இருக்கும் போது தான் நீதிமன்று கட்டளை விதிக்கலாம் ஆனால் இதனால் எந்த தடங்கலும் பொதுமக்களுக்கு ஏற்படாது.

பயங்கரவாத இயக்க உறுப்பினரை நினைவு கூறுவது தடை. ஆனால் தியாகி திலீபன் என்பவர் வன்முறையற்ற சாத்வீக போராட்டத்தில் உணவு தவிர்ப்பில் மரணித்த ஒருவர். அவரை நினைவு கூறுவது எந்த விதத்திலும் சட்டவிரோதமான நடவடிக்கை என கூற முடியாது.

30 வருடங்களாக இந்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. 31ஆவது தினம் நினைவுகூரப்படவுள்ளது. கட்டுமாறு அரசு பணித்துவிட்டு தற்போது தடுப்பது விசித்திரமானது என சமர்ப்பணம் செய்தார்.

இதேவேளை, நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வை முன்னெடுக்கும் தரப்பினர் (பாதிக்கப்பட்ட) மற்றும் பொதுமக்கள் சார்பில் தோன்றிய சட்டத்தரணிகளின் விண்ணப்பம் ஒன்றை சட்டத்தரணி கு.குருபரன் மன்றில் தோன்றி சமர்ப்பணம் செய்ய அனுமதி கோரினார். எனினும் வழக்கில் எதிராளியாகக் குறிப்பிடப்படாத தரப்புக்கு சமர்ப்பணம் முன்வைக்க மன்று அனுமதி மறுத்தது.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று, பிற்பகல் 2 மணிக்கு கட்டளை வழங்குவதாக அறிவித்து வழக்கை ஒத்தி வைத்தது.

பின்னர் நீதவான் தனது கட்டளையில்,

தடைசெய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரை நினைவுகூருவதற்கான ஏற்பாடுகள் நடப்பதாக பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த விடயம் அரச அனுமதியுடன் அமைக்கப்பட்டதால் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட, உடனடியாக ஆக்கப்பட வேண்டிய கட்டளை விண்ணப்பம் பொருத்தமற்றது. இடைக்கால தடை கோரிய விண்ணப்பம் இரத்து செய்யப்படுகிறது.

மேலும் குற்றவியல் நடவடிக்கை தண்டனை சட்டக்கோவையின் அடிப்படையில் தாக்கல் செய்வதாயின் போதுமான விசாரணைகளை மேற்கொண்டு மேலதிக அறிக்கை பொலிஸார் மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவித்து குறித்த வழக்கு விசாரணையை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ம-9)

## இரட்டை ஆண் குழந்தை...

யளவில் இரண்டு ஆண் குழந்தைகள் பிரசவித்துள்ளார்.

இந்த நிலையில் தாயார் மாலை 4 மணியளவில் உயிரிழந்துள்ளார் என்று சட்ட மருத்துவ விசாரணையில் தெரிவிக்கப்படுகிறது.

தாயாரின் அமினி ஓடிக் திரவம் குருதியில் கலந்துகொண்டதால் இறப்பு ஏற்பட்டது என்று சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

குடும்பப் பெண்ணின் உயிரிழப்புத் தொடர்பான தகவல் இரகசியமாகப் பேணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உயிரிழந்த தாயாரின் இரட்டைக் குழந்தைகள் ஆரோக்கியமான நிலையில் உள்ளனர் என்று யாழ்.போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-9)

## கொலைகள், கடத்தல்...

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் காணாமற்போன சம்பவங்களுக்கு கோத்தபாய ராஜபக்ஷவே காரணமாகும். இதனையே, நான் தொடர்ச்சியாக கூறி வருகிறேன்.

நான் யுத்தத்தை மட்டும்தான் நிறைவுக்குக் கொண்டுவந்தேனே ஒழிய, கொழும்பு மற்றும் புறநகரங்களில் இடம்பெற்ற குற்றச் செயல்களில் ஒருபோதும் ஈடுபட்டது கிடையாது. இவற்றுக்கெல்லாம் கோத்தபாய தான் காரணம் என்பதையும் அனைவரும் அறிவார்கள்.

இவ்வாறான குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க எனக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. கோத்தபாய ராஜபக்ஷவும், பொலிஸாரும் தான் இதுதொர்டர்பில் ஆராய்ந்திருக்க வேண்டும்.

நான் எப்போது வாக்குமூலம் அளிக்க வந்தாலும், இந்தக் குற்றச்செயல்களுக்கு கோத்தபாய ராஜபக்ஷதான் காரணம் என்பதைத்தான் கூறுவேன் என தெரிவித்துள்ளார். (ம)

## தொடரப்பட்ட வழக்கு...

ரிமையிலிருந்து நீக்கியமைக்கு எதிராக யாழ்.மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் பிரதிவாதிகளாக தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, செயலாளர் கி.துரைசிங்கம் மற்றும் பொருளாளர் பொ.கனகசபாபதி ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு விசாரணைக்காக நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அந்நிலையில் வழக்கு நேற்றைய தினம் மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி சுமந்திரனும், மனுதாரர் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணனும் முன்னிலையாகினர்.

இந்த வழக்குத் தொடர்பில் சட்டத்தரணி, எம்.ஏ. சுமந்திரனிடம் ஊடகவியலாளர்கள் கேட்ட போது,

இலங்கை தமிழரசு கட்சிக்கு எதிராக முன்னாள் பிரதேச சபை தவிசாளர் தாக்கல் செய்த வழக்கில் கட்சியில் இருந்து அவரை நீக்குவதற்கும், சபையின் உறுப்புரிமையை நீக்குவதற்கும் நீதிமன்றினால் கட்டளை வழங்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் இன்றைய தினம் (நேற்று) இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் சார்பில் முன்னிலையானேன். இந்த வழக்கு நீதிமன்றுக்கு வெளியே தீர்க்கப்பட்டுவிட்டது என எனக்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

அதனை நான் நீதிமன்றுக்கு ஆரம்பத்தில் தெரிவித்த போது, பிரகாஸ் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி வி.மணிவண்ணன் அவ்வாறு தனக்கு எதுவும் தெரியபடுத்தவில்லை என தெரிவித்து வழக்கினை மேற்கொண்டு நடத்தக் கேட்டுக்கொண்டார்.

அதன் போது நான் பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றினை தெரிவித்திருந்தேன். ,ந்த வழக்கு சரியான முறையில் தாக்கல் செய்யப்பட வில்லை கூட்டிணைக்கப்படாத நிறுவனத்திற்கு எதிராக மூவரின் பெயரை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்வதாயின் சிவில் நடவடிக்கை கோவை பிரிவின் 16 கீழ் நீதிமன்ற அனுமதி பெற்று ஊடகங்களில் அதனை தெரியப்படுத்த வேண்டும்.

அவற்றை நான் மேற்கோள்காட்டி வழக்கினை முதல் நிலையிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என தெரிவித்து சமர்ப்பணம் செய்தேன்.

அதன் பின்னர் மனுதாரரின் சட்டத்தரணி இந்த வழக்கு சமரசமாக தீர்க்கப்பட்டு உள்ளது தன்னுடைய கட்சிகாரர் தனது வழக்கை மீள பெற உள்ளதாக தெரிவித்தார். அதன் போது நீதிபதி மனுதாரரிடம் நேரடியாக கேட்ட போது, ஆம் நான் வழக்கினை மீளப் பெற விரும்புகிறேன் என தெரிவித்தார்.

வழக்கின் ஆரம்பத்தில் நான் சமரசம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த போதே வழக்கினை மீள பெற்று இருந்தால் வழக்கு செலவு கேட்டு இருக்கமாட்டேன். அப்படியில்லை எனத் தர்க்கித்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வுள்ளது என தெரிய வந்ததும் வழக்கினை மீள பெற விரும்புவதாக தெரிவித்தமையால் வழக்கு செலவினை கேட்டிருந்தேன். அதனால் எனக்கு வழக்கு செலவு தந்தே வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என தெரிவித்தார். (ம-9)

## தமிழ் அரசியல் கைதி...

வருவதகவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷார உப்புல்தெனிய கேசரியிடம் தெரிவித்தார்.

உண்ணாவிரதமிருக்கும் கைதிகள் தமது வழக்குகளை த்ுரிதப்படுத்துமாறு கோரிக்கை முன்வைப்பதாக கூறும் அவர், அது தொடர்பில் நீதிமன்றங்களிடம் அழுத்தம் பிரயோகிக்கும் அதிகாரம் தமக்கு இல்லை எனவும், அதனால் கைதிகளின் கோரிக்கையை தாம் சட்டமா அதிபருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷேர உப்புல்தெனிய தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

கைதிகளின் கோரிக்கை எமது அதிகாரத்துக்கு அப்பால் பட்டது. எம்மால் வழக்குகளை துரிதப்படுத்துமாறு நீதிமன்றங்களுக்கு அழுத்தம் கொடுக்க முடியாது. இந்த விடயம் குறித்து நாம் சட்ட மா அதிபருக்கு அறிவித்துள்ளோம் என்றார். (ம)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**

**வெளிவாரிப் பரீட்சைகள்**

**கலைமாணித் தேர்வு பகுதி-I-2015 (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 22.10.2018 (திங்கட்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 18.10.2018 (வியாழக்கிழமை) மற்றும் 19.10.2018 (வெள்ளிக்கிழமை) ஆகிய தினங்களில் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
25.09.2018

(சி-3954)


**கொவிசெத**

திகதி: 2018.09.25
சீட்டிழுப்பு இலக்கம்: 1893
ஆங்கில எழுத்து: V
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 19 44 45 75

தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**

திகதி: 2018/09/25
சீட்டிழுப்பு இலக்கம்: 3754
ஆங்கில எழுத்து: N
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 1 3 5 1 9 0

தேசிய லொத்தர் சபை

**செவண**

திகதி: 2018/09/25
சீட்டிழுப்பு இலக்கம்: 121
ஆங்கில எழுத்து: N
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 04 05 41 57

தேசிய லொத்தர் சபை

**நீரோகா**

திகதி: 2018/09/25
சீட்டிழுப்பு இலக்கம்: 451
லக்கினம்: மீனம்
வெற்றி இலக்கங்கள்: 01 04 05 28
65

தேசிய லொத்தர் சபை

## திலீபனின் நினை...

பொலிஸார் தடையுத்தரவு கோரும் மனுவொன்றினைத் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தியாகதீபம் திலீபனின் நினைவு நிகழ்வுகளை யாழ் மாநகரசபை நடத்துவதில் எவ்வித சட்டச்சிக்கல்களோ பாதிப்புக்களோ இல்லை என்றும், நினைவேந்தல் நிகழ்வுகளும், நினைவுத்தூபி அமைப்பதும் சட்டவிரோதமானதல்ல. அவை சட்ட பூர்வமானதே என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பின் அடிப்படையில் தியாகதீபத்தின் நினைவு நிகழ்வுகளை யாழ் மாநகர சபை திட்டமிட்ட அடிப்படையில் நடத்தும்.

இதற்கமைவாக இன்றைய நிகழ்வுகள் பின்வரும் ஒழுங்கமைப்பில் இடம்பெறும் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இன்று 26 செப்டம்பர் 2018 புதன்கிழமை காலை 10.48 மணியளவில் தியாகதீபம் திலீபன் இத்தேசத்திற்காகவும் எமது மக்களுக்காகவும் தனது இன்னுயிரை ஆகுதியாக்கிய இடத்தில் அகவணக்க நிகழ்வுகள் இடம்பெற்று அங்கிருந்து தியாகதீபத்தின் நினைவுத் தூபி இருக்கின்ற இடத்திற்கு அஞ்சலி செலுத்துவோர் வந்துசேர்வர்.

அங்கு பொதுச் சுடரினை எமது மக்களுக்காக தாம் ஈன்றெடுத்த இரண்டு உயிர்களை மாவீரர்களாக்கிய பெற்றோராகிய சின்னவன் சரசு ஆகியோர் ஏற்றுவார்கள். அதன் பின்னர் ஈகச்சுடரினை எமது மக்களுக்காக தாம் ஈன்றெடுத்த இரண்டு உயிர்களை மாவீரர்களாக்கிய பெற்றோர் விநாயக மூர்த்தி செல்வமணி ஆகியோர் ஏற்றுவார்கள்.

தியாகதீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையினை மாவீரர் இனியவனின் புதல்வியார் மோதழில் அணிவிப்பார். அதன் பின்னர் அஞ்சலி செலுத்துவோர் மலரஞ்சலிகளை செலுத்துவார்கள்.

இவ்வாறு இந்நினைவு நிகழ்வுகள் யாழ் மாநகரசபையின் ஏற்பாட்டில் உணர்வுபூர்வமாக நடைபெறுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

இப்போது தியாகதீபம் திலீபனின் நினைவு நிகழ்வை சிறப்புற அனுஷ்டிப்பதற்கு எல்லோரும் ஓரணியில் அணிதிரள்வோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## தமிழ் அரசியல்...

நாணயக்கார தெரிவித்தார். நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாத அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்போது அவர்கள் தொடர்பில் தேடிப்பார்க்கும் பொறுப்பை பொலிஸாருக்கு வழங்க வேண்டும். அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு வந்து தங்களை உறுதிப்படுத்த வேண்டும் போன்ற நிபந்தனைகளை விதிக்கலாம்.

எனினும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் அரசாங்கத்துக்கு எந்த தலையீட்டையும் மேற்கொள்ள முடியாது. வழக்கு விசாரணைகள் முடிந்த பின்னர் அரசாங்கத்தினால் அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

## பொன்சேகாவி...

கப்பட்ட சம்பவம் தொடர்பில், அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் 4 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீத் நொயார் கடத்தப்பட்ட ஆண்டு சரத் பொன்சேகா இராணுவ தளபதியாக பதவி வகித்திருந்தார். கீத் நொயாரை கடத்த இராணுவ புலனாய்வுப் பிரிவின் உயர்மட்டத்திலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டதாக விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டன. இதனடிப்படையில் சரத் பொன்சேகாவிடம் நேற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

கீத் நொயார் கடத்தல் தொடர்பாக சரத் பொன்சேகாவிடம் இதற்கு முன்னரும் விசாரணை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஐக்கி...

தனமையும் கொண்ட சமூகத்திற்கான உலகளாவிய தலைமைத்துவத்தின் ஒன்றிணைந்த பொறுப்பு எனும் தொனிப் பொருளில் இடம்பெறுகின்றது.

இந்த பிரதான அமர்வில் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் அரச தலைவர்களுடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணைந்து கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 1.30 மணியளவில் மாநாட்டில் தனது விசேட உரையை ஆற்றவுள்ளார். இது ஜனாதிபதி, ஐ.நா பொதுச்சபை கூட்டத் தொடரில் உரையாற்றும் நான்காவது சந்தர்ப்பமாகும்.(ம)


**வேலைவாய்ப்பு**

யாழ் நகரத்தில் இயங்கும் புடைவை விற்பனை நிலையம் ஒன்றுக்கு பெண் ஊழியர்கள் தேவை.
அடிப்படைச் சம்பளம் : 13,500/=
மதிய உணவு
தொடர்பு: 0770276441, 0778052898
(C-3957)

**பயிற்சியுடன் வேலை வாய்ப்பு**

பயிலுனர்கள் - 2018 இல் A/L எடுத்தவர்கள்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை
● எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால வேலை வாய்ப்பு பயிற்சிகள் உண்டு.
● விரும்பியவர்கள் பயிற்சி முடிவில் வேலையில் சேரலாம்.
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7'500/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226236
v2vacancies@gmail.com

**வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை
(C-3943)

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-3873)

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1kg 450/= மட்டும். கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும். U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
தொடர்பு: 077 868 9500
(5797)

**விற்பனைக்கு**

NP DAG XXXX எனும் இலக்கமுடைய TATA Super Ace (Model- 2018) வாகனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 141 6052
(C-3958)

**CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை**

அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர-வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-3941)


# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 . 03 . 1958



இறப்பு 18 . 09 . 2016

## அமரர் தர்மலிங்கம் தர்மராஜா

(உரிமையாளர் - சரண்யா மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்)

தந்தையே இமைப்பொழுதில் ஈராண்டும் சென்றுதுவோ
செவ்விதழின் புன்சிரிப்பும் செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த காலமெல்லாம் மறந்திடுமோ
எம் இதயத்துள் உம் நினைவுகள் என்றென்றும் மாறாது
இறைவன் தாள் மலரில் நீரமரப் பிராரத்திப்போம்

"பன்னாலை வாசம்"
தாவடி தெற்கு, கொக்குவில்.

- குடும்பத்தினர்

(5783)


**அரியதோர் வேலைவாய்ப்பு**

எமது EPL நிறுவனமானது இயங்கிவரும் கிளைகள் மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கிளைகளுக்காக ஆட்சேர்ப்பு திட்டங்களை ஏற்றுக்கொள்கிறது. O/L, A/L படித்த இளைஞர்கள், யுவதிகள் தொடர்பு கொள்ளவும்.
● EPF, ETF வசதி வாய்ப்பு உண்டு.
● சம்பள அளவுத்திட்டம் 22,000/= - 48,000/= வரை.
தொடர்புகளுக்கு: 021 722 3317, 077 517 9034
(5796)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**நிறஞ்சன் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
நிறஞ்சன் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.
தொடர்பு: 0763836129
(5798)

**Certificate in Computer Networking**

New Batch start on 06.10.2018
Duration : 2 Months
* Mobile Phone Repairing Course *
** Starts on 06-10-2018 **
ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 , 021-7306000
(C-3905)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.